# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 252 | சனி, செப்ரெம்பர் 16, 2023 | 14 பக்கங்கள்




## சதிகளிலிருந்து மீளுமா கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி

துரைராஜா ஜெயராஜா



தியாகதீபம் **திலீபன்** 36வது நிறைவாண்டின் நினைவில்...

**சிறப்புச் செவ்வி**



அருட்பணி **ஜெகதாஸ் கந்தையா** செவ்வி

## ஜெனிவாவை திசை திருப்புவதற்கு இலங்கை கையாளும் உபாயங்கள்




© 2023 இலக்கு இணையம்

# போரில் இலங்கை – இந்தியா கூட்டாக செயற்பட வழிவகுத்தவர் தூதராக நியமனம்



இந்தியாவின் மூத்த இராஜ தந்திரி சந்தோஷ் ஜா இலங்கைக்கான புதிய இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேசமயம் தற்போதைய இந்திய தூதுவர் கோபால் பாக்லே அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராக மாற்றம் பெற்றுச் செல்வதாக இந்தியாவின் வெளிவிவகாரச் கடந்த புதன்கிழமை (13) தெரிவித்துள்ளது.

ஜா தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தூதுவராக பணியாற்றி வருவதுடன், முன்னர் அமெரிக்கா, ரஸ்யா, உபகிஸ்தான் ஆகிய நாடுகளில் தூதுவராகவும், கொழும்பு, நியூயோர்க், புதுடில்லி ஆகிய பகுதிகளில் இராஜதந்திரியாகவும் பணியாற்றியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியும் நாணய தரமிறக்கலும்




இலங்கையின் நீண்டகால உள்ளூர் நாணய வழங்கலுக்கான தரத்தை பிறிஸ் என்ற அனைத்துலக நிதி தரப்படுத்தும் நிறுவனம் தரமிறக்கியுள்ளது. சி தரத்தில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட வீழ்ச்சி என்ற ஆர்.டி நிலைக்கு அது இலங்கையின் நாணயத்தை தரமிறக்கியுள்ளது.

உள்ளூர் கடன் மாற்றுத்திறனும் சி என்ற நிலையில் இருந்து டி என்ற கீழ் நிலைக்கு தரமிறக்கப்பட்டுள்ளது. நீண்டகால வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி ஆர்.டி ஆகவும், வெளிநாட்டு நாயண முறிகள் டி என்ற நிலைக்கும் தரமிறக்கப் பட்டுள்ளன.

இலங்கை அரசுக்கும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தடைவிதிக்கப்பட்ட வலைகளை பயன்படுத்த வேண்டாம்!

திருகோணமலையில் நேற்று மீனவர்கள் சட்ட விரோத மீன் பிடிக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப் பட்டிருந்த நிலையில், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களை திருகோணமலையில் வியாழக்கிழமை(14) ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தனர்.

இந்நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பாக மீனவ சங்கத்தினருடனும், கடற்படையினர், கரையோர பாதுகாப்பு படையினர்,




பொலிஸ் அதிகாரிகள், அதிரடி படையினர் ஆகியோருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஆயுத – தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பில் ரஸ்யா

## வடகொரியாவுக்கிடையில் இணக்கம்




ரஸ்யாவுக்கு இந்த வாரம் பயணம் மேற்கொண்ட வட கொரிய அதிபர் கிம் ஜொங் யுன் ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீனுடன் மேற்கொண்ட பேச்சுக்களை தொடர்ந்து இரு நாடுகளும் ஆயுத மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக ரஸ்ய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரஸ்யாவுக்கு தனது இரும்பு கவசம் பொருத்திய தொடரூந்தில் வருகைதந்த கிம் கடந்த புதன்கிழமை (13) ரஸ்யாவின் விண்வெளி ஏவுதள உந்துகணைகளை

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# லிபியாவில் புயல் அனர்த்தம் – 11,000 பேர் பலி, பல ஆயிரம் மக்களை காணவில்லை

லிபியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) மற்றும் திங்கட்கிழமைகளில் (11) இடம்பெற்ற புயல் மற்றும் கடும் மழை காரணமாக இரு ஆறுகளின் அணைகள் உடைப் பெடுத்ததால் இது வரை 11,300 பேர் உயிரிழந்ததாகவும் மேலும் பல ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



லிபியாவின் வடகிழக்கில் உள்ள டெர்னா என்ற நகர் உட்பட பல நகரங்கள் கடுமையான அழிவுகளை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.


டெர்னா நகரம் லிபியாவின் பென்ஹாசி என்ற நகரத்தில் இருந்து 300 கி.மீ தூரத்தில் உள்ளது. 100,000 மக்கள் தொகையை கொண்ட இந்த நகரமே மிகப்பெரும் அழிவை சந்தித்துள்ளது.

இந்த அனர்த்தத்தினால் பெருமளவான உடமைகள் சேதமடைந்ததுடன், 30,000 பேர் தமது வீடுகளை இழந்துள்ளதாகவும், இடம்பெயர்ந்த மக்களிடம் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும் லிபியாவின் செஞ்சிலுவைச்சங்கம் கடந்த புதன்கிழமை (13) தெரிவித்துள்ளது.

இதுவரையில் 8,000 மரணங்களை பதிவு செய்துள்ளதாகவும் ஆனால் இறப்பு விகிதம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சூழல் மாசடைவதால் பூமி வெப்பமாகி வருவதாகவும், அதனால் கடல் மட்டத்தின் வெப்ப நிலை உயர்வதால் புயல் மற்றும் கடுமையான மழை வீழ்ச்சி என்பன பல நாடுகளில் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலைகளில் அதிகரிக்கும் துப்பாக்கி பிரயோகங்கள்




அமெரிக்காவில் பாடசாலைகளில் இடம்பெறும் துப்பாக்கி பிரயோகங்களில் இறப்பவர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக இந்த வாரம் வெளியிடப்பட்ட தேசிய கல்வி புள்ளிவிபர ஆவணம் தெரிவித்துள்ளது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகங்களின் எண்ணிக்கை 188 ஆகும் அதில் 57 சம்பவங்களில் மரணங்கள் ஏற்பட்டிருந்தது. அதற்கு முன்னைய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஞாபகமறதி ஏற்படுவதற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டது



மூளையில் உள்ள கலங்களின் இறப்பினால் மனிதர்களில் ஞாபகமறதி நோய் (Alzheimer's disease) ஏற்படுகின்றது. இது வயதான வர்களையே அதிகம் பாதிக்கின்றது.

பிரித்தானியா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகளின் முயற்சியால் இந்த நோய் எப்படி ஏற்படுகின்றது என்ற காரணம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பானது எதிர்காலத்தில் இந்த நோயை குணப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வயதானவர்களில் மூளையில் உள்ள சில நரம்புக் கலங்கள் தற்கொலை செய்வதால் (Necroptosi) இந்த நோய் ஏற்படுகின்றது. மூளையில் உள்ள கலங்கள் MEG3 என்ற மூலக்கூறை உற்பத்தி செய்வதால் அந்த மூலக்கூறுகள் கலங்களின் இறப்பை தூண்டுகின்றன. கலங்கள் இறப்பதால் நரம்பு கலங்களுக்கு இடையில் ஏற்படும் இடைவெளி காரணமாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அனைத்துலகத்தை தொடர்ந்து ஏமாற்ற முடியாத நிலையில் இலங்கை

பொறுப்புக்கூறல் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பேணுதல் உட்பட பல்வேறு ஜனநாயக மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்து அனைத்துலக சமூகத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றிவரும் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும், அமெரிக்கா தலைமையிலான இணைத்தலைமை நாடுகளும், இந்தியாவும் தற்போது இலங்கை மீதான தமது அழுத்தங்களை அதிகரிப்பதை அவர்கள் கடந்த இரு வாரங்களில் வெளியிட்ட அறிக்கைகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பில் இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போதுமானதல்ல என்பதுடன், இலங்கை அரசு தான் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான இந்திய பிரதிநிதி இந்திரா மணி கடந்த செவ்வாய்க்கிழமை (12) ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் நாம் அவதானித்து வருகின்றோம். ஆனால் இலங்கையின் நடவடிக்கைகள் போதுமானதல்ல. இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றி எல்லா இன மக்களும் சுதந்திரமாகவும், அடிப்படை உரிமைகளுடனும் வாழ வழிஏற்படுத்த வேண்டும்.

இலங்கை அரசு 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதுடன், மாகாணசபை தேர்தல்களையும் நடத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளரின் அறிக்கை இலங்கை தொடர்பில் மிகவும் காத்திரமாக வெளிவந்துள்ளதுடன், இலங்கை மீதான நடவடிக்கைக்கு அது உறுப்பு நாடுகளின் ஆதரவுகளை கோரியுள்ள அதேசமயம் இந்தியாவின் அறிக்கையும் காத்திரமாக வெளிவந்துள்ளது.

இதனிடையே, நீதியை நிலைநாட்டுவதற்கும் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கைக்கு தற்போதும் காலம் உள்ளது. இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என இணைத்தலைமை நாடுகள் சார்பில் அறிக்கை வெளியிட்ட பிரித்தானியா கடந்த திங்கட்கிழமை (11) தெரிவித்துள்ளது.

கனடா, வட மசடோனியா, மலாவி, மொன்ரோ நீக்ரோ, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைத்தலைமை நாடுகளின் குழுவில் உள்ளன.

காணி விவகாரம் மற்றும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க முயற்சித்துள்ளது. இந்த முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் தொடர்ந்தும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் உள்ளன. அதனை இலங்கை அரசு நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துலக தராதரத்தில் நீதி வழங்கப்பட வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையை விட இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் காத்திரமாக வெளிவந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் இலங்கைக்கு உதவி வழங்கும் ஐக்கிநாடுகள் சபை அமைப்புக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இலங்கை அரசின் மனித உரிமை செயற்பாடுகள் மற்றும் இனநல்லிணக்கப்பாடுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இனநல்லிணக்கப்பாடுகள் மற்றும் உண்மைகளை கண்டறிதல் செயற்பாடுகளை பலப்படுத்த வேண்டும். மாகாணசபைகளை வலுப்படுத்தி 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## பேச்சுவார்த்தைப் பலத்தை அதிகரிப்பதன் மூலம் இறைமையை உறுதிப்படுத்தல்

ஒரு பூமி ஒரு குடும்பம் ஒரு எதிர்காலம் என்னும் மையப்பொருளில் இந்தியாவில் நடைபெற்ற 2023ம் ஆண்டுக்கான ஜி20 உலகத்தலைவர்களின் உச்சி மாநாடு 200 மணித்தியால இந்திய ராஜதந்திரிகளின் சோர்வற்ற தொடர் உழைப்பால் 300 இருதரப்பு உறவுக்கலந்துரையாடல்களை உள்ளடக்கி 15 வரைபுகளைக் கட்டமைத்து இறுதியில் உக்ரேன் யுத்தம் குறித்து பங்குபற்றிய நாடுகளின் ஒருமித்த பிரகடனத்துடன் கடந்த வாரத்தில் முடிவடைந்துள்ளது. இது குறித்து பிரித்தானியாவின் கார்டியன் ஆங்கில நாளிதழின் ராஜதந்திரம் குறித்த பத்திரிகையாசிரியர் பற்றிக் வின்ரூர் அவர்களின் 10.09.2023ம் திகதி "உக்ரேன் குறித்துத் தளர்த்தப்பட்ட ஜி20 அறிக்கை இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பின் அடையாளம்" என்னும் தலைப்பிலேயே இந்தியாவின் முயற்சியைப் பாராட்டிய ஆய்வுக்கட்டுரையில் உக்ரேனுக்கான முன்னுரிமையில் வழுகும் ஜோபைடன் சீனாவுடன் நெருக்கமாகின்றார் என்னும் மையக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது. ஒருவருடத்துக்கு முன்னர் இதே தலைவர்களால் பாலியில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் ரஸ்யாவைக் கண்டித்தது போன்றோ அல்லது ரஸ்யப் படைகள் விலகவேண்டுமென்று நிபந்தனைகள் அமைத்தது போன்றோ எதுவுமில்லாது உக்ரேன் யுத்தம் அமைதிக்கு வரவேண்டுமென்ற பொதுவான கொள்கைப் பிரகடனமாக இந்த அறிக்கை அமைந்ததற்கு இந்தியாவின் செல்வாக்கே காரணமென்பது ராஜதந்திர பத்திரிகையாசிரியரான பற்றிக் வின்ரூரின் மதிப்பீடாக உள்ளது. உக்ரேனின் ஜனாதிபதி செலன்ஸ்கியை டிஜிற்றல் வெளியில் கூட மாநாட்டில் உரையாற்றவிடாது முழுக்க முழுக்க ரஸ்ய வெளிவிவகார அமைச்சருக்கே இடமளித்த மாநாடாக இம்மாநாடு நிறைவுபெற்றுள்ளது. ஒரு அரசின் தேசிய இறைமைக்கு முக்கியத்துவம் கொடுத்தல், ஐக்கியநாடுகள் சபையின் சாசனங்களுக்கு மதிப்பளித்தல், அணுவாயுதப் பயன்பாட்டுக்கு அனுமதி மறுத்தல், முன்னைய அறிக்கைகளை மீளவும் பயன்படுத்தாமை என்கின்ற நான்கு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி இந்த உக்ரேன் சார்பு நிலையில்லாத ஜி20 நாடுகளின் ஒருமித்த பிரகடனத்திற்கு இந்தியா நெறிப்படுத்தியுள்ளது என்பது பற்றிக் வின்ரூரின் ஆய்வு வெளிப்பாடாகவும் அமைகிறது.

இதே பாணியான ராஜதந்திர உத்தியையே இந்தியா ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சார்பாக உலக நாடுகளும் அமைப்புக்களும் அவர்களின் இறைமையுடன் கூடிய வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஏற்புடைய தீர்வுக்கு உதவவிடாது இலங்கை அரசாங்கத்தின் இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் முக்கியத்துவப்படுத்தி தனது சந்தை நிலை இராணுவ நிலை என்னும் உலகச் செல்வாக்கால் தடுத்து வருகிறது. இதனையே ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54வது கூட்டத்தொடர் இம்மாதம் 11ம்நாள் தொடங்கிய பொழுது அன்றைய நாளிலேயே இடம்பெற்ற இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து பார்வை அறிக்கையை வெளிப்படுத்தலில் மனித உரிமைகள் ஆணையகத்தின் பதில் உயர் ஆணையாளர் நடா-அல் நஷிங் அவர்கள் இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைத்தல் என்பதற்கு மட்டுமே முன்னுரிமை அறிக்கையில் இனஅழிப்புக்கு உள்ளாகி வரும் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுக்கான விதந்துரைத்தமை வெளிப்படுத்துகிறது. இந்தியா ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையினை உலக நாடுகளும் உலக அமைப்புக்களும் ஏற்பதற்கு தடையாக முன்னிலைப்படுத்தி வரும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்பது ஈழத்தமிழரின் இறைமை மறுப்பாகவே அமையும். இதனை இந்தியாவைத் திருப்திப்படுத்த ஈழச் செயற்பாட்டாளர்களும் ஆதரிப்பது உலகு இதனை முன்னெடுக்க மூலகாரணமாகிறது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் இதனைக் கூறி 13ஐ ரணில் நடைமுறைப்படுத்த இதுவே தருணமெனக் கூறியுள்ளார். 2009 சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பால் நடைமுறை அரசுடன் விளங்கிக் கொண்டிருந்த ஈழத் தமிழரின் தமிழீழத் தேசத்தையே 146000க்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களை தேசமாகவே மனிதப்படுகொலை செய்து 14 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இன்று வரை தங்களுக்கான பரிகாரநீதியையோ அல்லது இனஅழிப்பைச் செய்த சிறிலங்கா அரசத்தலைமைகளுக்கும் அவர்களின் ஆணையை முன்னெடுத்த ஆயுதப்படையினருக்கும் தண்டனை நீதியையோ பெற்றுக் கொடுக்க இயலாத கையாலாகாத இனமாக இன்று வரை ஈழத்தமிழினம் உலகில் விளங்கிக் கொண்டிருப்பதை இந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை மீளவும் உறுதி செய்துள்ளது.

மேலும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய கட்டமைப்பான ஜி 77 பிளஸ் சீனா என்கிற 134 நாட்டுத் தலைவர்கள் சந்திக்கும் மாநாடு கியூபாவின் தலைநகரான ஹவானாவில் நேற்று 15ம் திகதி தொடங்கி இன்று 16ம் திகதி வரை தொடர்கிறது. இந்த மாநாட்டில் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "இந்தியாவின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் விளைவாகப் புதிய தொழில்நுட்பங்களான டிஜிட்டல் மயமாக்கல், உடல்நலம், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பசுமை நைட்ரஜன் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற தொழில்நுட்பத் தளங்களில் பொது மற்றும் தனியார் ஒத்துழைப்புக்களை வளர்க்க வல்ல நிபுணத்துவம் வாய்ந்தவர்களை உருவாக்க நான்கு பல்கலைக்கழகங்களை நிறுவ உள்ளதாகவும் காலநிலை மாற்ற ஆய்வுக்கான ஐந்தாவது பல்கலைக்கழகம் ஒன்றையும் திட்டமிடுவதாகவும் அறிவித்துள்ளார். உலகளாவிய தென்னகத்திற்கான அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்களுக்கான 'கொஸ்டிஸ்' (COSTIS) சமூகத்தைப் புதுப்பிக்க ஜி77 பிளஸ் சீனா அமைப்பினரின் பயனுள்ள ஒத்துழைப்பும் கொழும்பு திட்டம் போன்ற புதிய திட்டமும் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றினதும் ஆகக்குறைந்தது ஒரு வீத நிதிப்பங்களிப்பும் மாநாட்டின் கூட்டுக்குரலை அனைத்துலக சமுகத்துக்குக் கொண்டு செல்வதில் அனைத்து உறுப்புநாடுகளின் ஒருமித்த கூட்டுப் பங்களிப்பும் தேவை" என உரையாற்றியுள்ளார். இவருடைய இந்த உரையும் இறைமையைப் பாதுகாத்தலில் பேச்சுக்களின் பலத்தையும் கூட்டொருங்கு செயற்பாட்டின் முக்கியத்துவத்தையும் அனைத்துலகத் தொடர்பாடலின் இன்றியமையாமையையும் வலியுறுத்தி உள்ளதைக் காணலாம். சிங்கள தேசம் தன்னை இவ்வாறு பலப்படுத்த தமிழர் தேசம் கூட்டொருங்கு ஒருமிப்புச் செயற்பாட்டுக்கு மறுத்து தன் மண்ணையும் மக்களையும் விடுவிக்க இயலாத நிலையில் தவிப்பதே இன்றைய அரசியல் எதார்த்தமாக உள்ளது என்பதையே இலக்கு இம்மாநாடுகள் வழி சுட்டிகாட்ட விரும்புகிறது. இந்து சமுத்திர வளைய நாடுகள் அமைப்பின் 23வது மாநாடு கொழும்பில் அக்டோபர் 10ம் 11ம் நாட்களில் நடைபெறவுள்ளது. இது குறித்த ஆயத்தக் கருத்தரங்கில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி சீனக் கப்பலுக்கான வருகைத் தேதி நிரிணயிக்கப்படவில்லையென ராஜதந்திரமாகப் பேசி நிலைமையைச் சீர்படுத்தியமையும் ராஜதந்திர செயற் பாட்டின் முக்கியத்துவத்தை மீளுறுதி செய்துள்ளது.

இம்மாநாடுகள் எல்லாமே பேச்சுவார்த்தை பலத்தை அதிகரிப்பதன் மூலம் இறைமையை உறுதிப்படுத்தல் என்ற நோக்கிலேயே நடைபெறுகின்றன. இதன் வழி நாடுகள் தங்களுக்கான பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளல் என்பது இம்மாநாடுகளின் போக்காக உள்ளது. இவை ஈழத்தமிழர்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் உலக அரசியல் பொருளாதார முறைமைகள் செயற்படுவதையும் சமூக பொருளாதார அரசியல் ஆன்மீக முரண்பாடுகள் நிறையவே உள்ள நாடுகள் அவற்றுக்கு மத்தியிலும் பொதுவெளியில் தம்மை இணைத்து வேறுபாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்காது மாறுபாடுகளை மதித்து தங்கள் தங்கள் தனித்துவங்களுடன் தங்களிடை இணைப்புகளையும் கட்டியெழுப்பும் எதார்த்த அரசியலில் செயற்படுவதைத் தெளிவாக உணர்த்துகின்றது. இதனைக் கவனத்தில் எடுத்து ஈழத்தமிழர்கள் தாங்களும் தங்களிடையுள்ள மாறுபாடுகளை மதித்து அவற்றைக் கடந்து கூட்டொருங்கு செயற்பாடுகளை உருவாக்கினால் மட்டுமே ஈழத்தமிழர்களின் இறைமையை மீளுறுதி செய்ய முடியும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**



# சதிகளிலிருந்து மீளுமா கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி

## துரைராஜா ஜெயராஜா

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் கடந்த 06 ஆம் திகதியிலிருந்து இடம்பெற்றுவருகின்றன. இக் கட்டுரை எழுதப்படும்வரையில் 09 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழப்பட்டுள்ளன. அதாவது நீதிமன்ற கண்காணிப்புடனான – முறைப்படியான அகழ்வுகளுக்கு முன்னர் தோண்டப்பட்டிருந்த 13 மனித எழும்புக்கூடுகளில் 09 இனை தற்போது முறைப்படியாக அகழ்ந்திருக்கின்றனர். இந்த அகழ்வில் மனித எலும்புக்கூடுகளுடன் முன்னாள் பெண் போராளிகளது என சந்தேகிக்கப்படும் ஆடைகள், விடுதலைப்புலிகளின் படைய அடையாளமான மூன்று தகடுகள், சயனைற் குப்பி ஒன்று, ரஸ்ய தயாரிப்பானநீர்ச்சுத்திகரிப்புகுழாய்ஒன்றுஆகியன இதுவரையில் அகழப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்ற இவ்வாய்வுப் பணிகளில் சிறிலங்காத் தொல்லியல் திணைக்களத்தினைச் சேர்ந்த அகழ்வாய்வாளர்கள், சட்ட வைத்திய அதிகாரி, சிறிலங்கா பொலிஸ் பிரிவின் தடய ஆய்வாளர்கள், சி.எச்.ஆர்.டி நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள், காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடியறியும் ஆணைக்குழுவினர் (OMP) ஆகியோர் கலந்துகொண்டிருக்கின்றனர். பிராந்திய அரசியல்வாதிகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.



ஈழத்தமிழர் மீது சிறீலங்கா அரச படைகள் இறுதிப் போரின்போதும், அதற்கு முன்பும் நன்கு திட்டமிடப்பட்ட இனப்படுகொலையை நடத்திவருகின்றனர். அந்த இனப்படுகொலை பொறிமுறையின் கீழ் நிகழ்ச்சிநிரல்படுத்தப்பட்ட போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இவை குறித்த சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற கோரிக்கைகளைத் தமிழர்கள் மிக நீண்டகாலமாகவே முன்வைத்துவருகின்றனர். இதனை வலியுறுத்தும், இறுதிப்போர் வேளையில் தம் உறவுகளை இராணுவத்திடம் கையளித்த வலிந்து காணாமலாக்கப்பட்டோர் கடந்த நான்கு வருடத்திற்கும் மேலாகப் போராடியும் வருகின்றனர். இதனையெல்லாம் கணக்கிலெடுக்காத சிறீலங்கா அரசு, எவ்வித பொறுப்புக்கூறலையும் கூறாது இறுமாப்புடன்



தட்டிக்கழித்தே வந்திருக்கின்றது. இனப்படுகொலை நடந்தமைக்கு எந்தச் சான்றும் இல்லை, எல்லாவற்றையும் அழித்துவிட்டோம் என்கிற நினைப்பில்தான் இந்த தட்டிக்கழிப்புக்கள் நடந்தன. ஆனால் இப்போது புதைகுழிக்குள் இருந்து உண்மை பேசத் தொடங்கிவிட்டது. தமிழ் இனத்தின் விடுதலைக்காகத் தம் இன்னுயிர்களைத் தியாகித்தவர்கள், எலும்புக்கூடுகளாக்கப்பட்ட பின்னரும் எழுந்து வந்து போராடத் தொடங்கிவிட்டனர். உலகின் மனச்சாட்சியை உலுக்கத் தொடங்கிவிட்டனர். எனவேதான் இந்தப் புதைகுழி அகழ்வு வேலைகளின் மீது அரசியல் பின்னப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தை எப்படியாவது திசைமாற்றி விடுவதற்கான திறைமறைவு வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன.



கடந்த நான்கு வருடங்களாகத் தெருவில் வாழ்ந்தபடி போராடிக்கொண்டிருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அரசுக்கு உள்ளகரீதியாகவும், வெளியகரீதியாகவும்பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இந்நாட்டில் இவ்வளவு பாரிய மனிதக் கடத்தல்கள், கொலைகள், காணாமலாக்கப்படுதல்கள் இடம்பெற்றுள்ளன என்கின்ற செய்தியின் காரம் குறையாமல் வைத்திருக்கின்றனர். எனவே அவர்களைப் போராட்ட களத்திலிருந்து அகற்ற வேண்டும். அல்லது அவர்களாக போராடிக் களைத்து ஒதுங்கிக்கொள்ள வேண்டும். அல்லது போராடிப் போராடியே இறந்துபோக வேண்டும் என அரசு திட்டமிடுகிறது. போராடத்தொடங்கிய காலத்திலிருந்து 187 தாய்மார்கள், தந்தைமார்கள் இறந்தபோதிலும், மக்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. பல்வேறு நோய் நிலைகளுக்குள்ளிருந்தும், வறுமை நிலைக்குள்ளிருந்தும் நெஞ்சுரத்தோடு போராடிக்கொண்டிருக்கின்றனர். கொக்குத்தொடுவாய் புதைகுழியுடன் வெளியுலகிற்கு சொல்லப்படும் செய்தி, இறுதி நேரத்தில் சரணடைந்தவர்கள் ஏதோ ஒருவிதத்தில் இறந்துவிட்டனர். எனவே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மரண சான்றிதழையும், அரசு ஒதுக்கும் நிவாரணங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதே ஆகும்.

இதற்கான வேலைகளை காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறியும் ஆணைக்குழு (OMP) ஏற்கனவே தொடங்கிவிட்டது. இதுவரை காலமும் பல்வேறு கூட்டங்கள், விசாரணைகள் நடத்திய அந்த ஆணைக்குழு எல்லாவற்றிலும் தோற்றுப்போனது. காணமலாக்கப்பட்டவர்களின் உறவினர் OMP இன் அனைத்து முன்மொழிவுகளையும் நிராகரித்து, அதன் அரசியலை



அம்பலப்படுத்தியிருந்தனர். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், OMP இலும் மாற்றங்களைச் செய்துள்ளார். முழுக்க முழுக்க தமிழர்களைப் பணியாளர்களாக நியமித்து, காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளின் நாடிபிடித்து வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றனர். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தனித்தனியே கிராம அலுவலர்களின் அலுவலகங்களுக்கு அழைத்து, பல விண்ணப்பங்களைப் பதிவு செய்கின்றனர். அவர்களது வறுமையைக் காரணம் காட்டி பல்வேறு உதவிகளைச் செய்ய வாக்குறுதிகளை வழங்குகின்றனர். மறுபுறத்தில் புலனாய்வுத்துறையினரை வீடுவீடாக அனுப்பி, போராட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்றும், அந்தப் போராட்டங்கள் புலம்பெயர் தமிழர்களின் நிதியைப் பெறுவதற்காக ஒருசிலரால் நடத்தப்படுபவை என்றும், தொடர்ந்து போராடினால் வீட்டில் இருக்கும் ஏனைய பிள்ளைகளுக்கும் பிரச்சினை வரும் என்றும் பரப்புரை செய்கின்றனர். இந்தப் பரப்புரைகள், சதி முயற்சிகள் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் உறவினர்களால், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்



பில் வரும் செய்திகளுக்குப் பின்னால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. பல தாய்மார்கள், தந்தைமார்கள் மனவுளைச்சலுக்குள்ளாக்கி, நோயில் படுத்துவிட்டனர். இவ்வளவு காலமும் தம் பிள்ளை வருவான் / வருவாள் என்கிற பெரு நம்பிக்கையோடு போராடியவர்களுக்கு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஜெனிவாவை திசை திருப்புவதற்கு இலங்கை கையாளும் உபாயங்கள்



அருட்பணி
ஜெகதாஸ் கந்தையா
செவ்வி

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. ஆரம்ப நாளிலேயே வெளியான ஆணையாளரின் அறிக்கையில் இலங்கை விவகாரங்கள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் இந்த கூட்டத் தொடர் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பது குறித்தும் ஜெனீவாவில் இடம்பெறும் அரசியல் - இராஜதந்திர நகர்வுகள் குறித்தும் ஜெனிவாவுக்குப் பயணமாகியுள்ள சிவில் சமூக செயற்பாட்டாளரும் மட்டக்களப்பு மாவட்ட பல் சமய ஒன்றியத்தின் செயலாளருமான அருட்பணி ஜெகதாஸ் கந்தையா அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியிருக்கும் நிலையில் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளிவந்திருக்கின்றது. இலங்கை தொடர்பாகவும் சில விஷயங்களை அவர் தெரிவித்திருக்கின்றார். இவற்றை நீங்கள் ஈழத் தமிழர்களுக்கு சாதகமான ஒன்றாகப் பார்க்கின்றீர்களா?**

உண்மையில் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை வெளியாகி உள்ளது ஆனால் அது பெரிதளவில் ஈழத் தமிழர்களுக்குஇழைக்கப்பட்ட இனஅழிப்பிற்கும், தற்போது நடைபெற்று வரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பிற்கும் ஒரு நீதி தேடிய நிலையிலே ஈழத் தமிழர்கள் கடந்த பதினான்கு வருடமாக ஐ.நாவில் அல்லது சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்ற நிலையில் தற்போது வெளியாகி உள்ள ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை பெரிய அளவில் நம்பிக்கை தருவதாக இல்லை அல்லது ஈழத்தமிழர்களது ஆத்மார்த்தமான அந்த நீதி சார்ந்த கோரிக்கையை வலுச்சேர்ப்பதாக இருக்கவில்லை ஆனாலும் ஈழத் தமிழராகிய நாங்கள் ஈழத்தமிழர் சார்ந்து நீயாகவும் உண்மையாகவும் நீதியாக செயல்படுபவர்கள் ஒவ்வருவரும் தங்களுடைய அந்த கோரிக்கையை தங்களுடைய நியாயம் நீதி தேடிய அந்த கோட்பாட்டை தொடர்ந்து உறுதியாக அந்த கோட்பாட்டை முன்வைக்க வேண்டியதாக எங்களுக்கு உணர்த்துகிறது.

நாங்கள் பல முன்வைத்தல்களின் அடிப்படையில் தான் ஈழத் தமிழர் குறித்து இந்த ஐநா சபை கூட்டத்தொடரில் பேசப்படுகின்றது. ஆனால் நாங்கள் இதையும் சாதகமாக எடுத்து எங்களை முன்னகர்த்தி கொண்டு செல்வதற்கு இதனை ஒரு படிமுறையாக பயன் படுத்தி கொள்ளலாம் .

**சர்வதேசத்தின் இந்த கரிசனையை இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் புறக்கணித்தே வந்திருக்கின்றது. இப்போது அவர்கள் எவ்வாறு இதனை எதிர்கொள்வார்கள் என நினைக்கின்றீர்கள்?**

உண்மையில் இலங்கை அரசு புறக்கணித்துத்தான் வருகிறது. சிலவேளைகளில் இலங்கை அரசுக்கு சாதகமாக தீர்மானங்கள் நிறைவேற்றினால் கூட இலங்கை அரசு புறக்கணித்து வருகிறது. இந்த புறக்கணிப்பு எதை கூறுகிறது என்றால் இந்த நாட்டில் தமிழறிஞர்களுக்கு நீதி, நியாயம் ஒரு போதும் வழங்க போவதில்லை எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் எங்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பிற்கும் சர்வதேச நீதி ஒன்றுதான் பரிகாரமாக அமையும்.

ஆம் ஏனென்றால் கடந்த நாட்களில் அல்லது கடந்த காலங்களில் பாற்கின்றபோது அவர்களுடைய பிரச்சினை அல்லது ஈழத்தமிழர்களது பிரச்சினை தீர்வு முயற்சி எடுக்கின்ற போது அவர்கள் பொதுவாக கூறுவது இலங்கையில் எல்லா தரப்பிலும் பிரச்சனை காணப்படுகின்றது. அதேபோன்று தான் தமிழர்களுக்கும் பிரச்சனை உள்ளது என்று அதேபோன்று தான் ஈழத்தமிழர்களது பிரச்சனைகள் அவர்களுடைய குரல்கள் மேல் எழுகின்ற பொழுது வேறு வேறு பிரச்சினைகளை கொண்டு வந்து அதனை திசை திருப்புவார்கள்.

இதற்கு சிறந்த உதாரணம் இலங்கையில் யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தங்களுடைய நீதி கோரிய நெடிய பயணத்தின் போது 2015 ஆண்டு இலங்கை ஐ.நா உடன்படிக்கையின் அடிப்படையில் காணாமல்



அதாவது இலங்கையில் உள்ள உள்ளக விசாரணை அல்லது கலப்பு பொறிமுறையோ எங்களுக்கு எந்தவிதமான தீர்வுகளையும் தராது. சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் மாத்திரமே இதற்கான தீர்ப்பை வழங்க வேண்டும் என்பதனை இலங்கை அரசின் தொடர்ச்சியான புறக்கணிப்பு எங்களுக்கு எடுத்து காட்டுகின்றது.

**போர்க் குற்றம் என்ற விடயத்தை தாண்டி தென்னிலங்கை நிகழ்வுகள் ஜெனீவாவில் அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு நிலை உருவாகியுள்ளது. இது ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கப்படுவதில் பின்னடைவை ஏற்படுத்துமா?**

ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு அலுவலகம் ஒன்றை திறப்பதாக கூறினார்கள். அதை பின்னர் O.M.V என்று அதனை சொன்னார்கள். அதாவது காணாமல் போனோருக்கான அலுவலகம் என்று அதனை தொடங்கி அந்த கட்டமைப்பை உருவாக்குகின்ற பொழுது சொன்னார்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரியது என்று முதல் கூறினார்கள். இலங்கையில் பல பாகங்களிலும் பல்வேறு சம்பவங்களிலும் காணாமல் போனவர்களுக்கு என்று ஆகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மையான பிரச்சனை காணாமல் போனவர்கள் இலங்கையில் எல்லா இடங்களிலும் உள்ளனர் என்று நீர்த்து போக செய்தார்கள்.

ஆகவே ஐ.நா வில்லும் தென்னிலங்கை சார்ந்த வேறு இடங்களிலும் வேறு வேறு செயற்பாடுகள் வேறுவேறு நிலைப்பாடுகள் உருவாகுவது நிச்சயமாக ஈழத் தமிழர்களது

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மட்டக்களப்பு மாவட்டத்தின்
# படுவான்கரை பிரதேசத்தில் வரட்சி

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணத்தினை பொறுத்த வரையில் சுமார் 25வீதமான பகுதியானது நீர் நிலைகளினால் சூழ்ந்த பகுதியாக கருதப்படுகின்றது. கிழக்கில் அதிகளவான பகுதியில் நீர் நிலைகள் காணப்படுகின்ற போதிலும் அதிகளவான மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஸ்டங்களை தொடர்ச்சியாக எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தின் பல பகுதிகளில் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். படுவான்கரையினைப் பொறுத்த வரையில் வறட்சியான காலநிலை ஏற்படும் பாரியளவில் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ளும் பகுதியாக காணப்படுகின்றது.



தமிழர்களின் பண்பாடு, கலாசாரத்தினைப் பொறுத்த வரையில் அனைத்தையும் தமது அத்தியாவசிய பொருட்களாக என்றும் குறைவற்ற நிலையிலேயே வாழ்ந்துவந்தான். குடிநீராக இருக்கட்டும், உணவாகயிருக்கட்டும், உறையுளாக இருக்கட்டும் தமிழன் அனைத்திலும் தன்னிறைவடைந்தவனாகவேயிருந்தான்.

இந்த நாட்டில் தமிழர்கள் தங்களை தாங்களே ஆளும் நிலையிருந்தபோது அவர்களின் பொருளாதார கட்டமைப்பும் அவர்களுக்கான தேவைகளும் குறைவின்றி கிடைத்தன. அவர்களின் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டன. அதன் காரணமாக விவசாயமும் கால்நடை வளர்ப்பும் மீன்பிடியும் கொடிகட்டிப் பறந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் இந்த மாவட்டத்திற்கு அந்நிய படையெடுப்பு நடைபெறுவதற்கு பிரதான காரணமாகயிருந்தது இங்குள்ள வளங்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தினை வெள்ளையர்கள் முற்றுகையிட்டு கோட்டை அமைத்து இங்கு தனி நிர்வாக அலகொன்றை ஏற்படுத்தி ஆட்சிசெய்ய காரணமாகயிருந்தது இங்கிருந்த வளங்கள். இந்த வளங்களிலிருந்து கிடைக்கப்பெற்றவற்றை இங்கிருந்தே தமது நாடுகளுக்கு கொண்டுசென்றனர்.



அவ்வாறான வளங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டம் இன்று ஏனையவர்களிடம் கையேந்தும் நிலைமையினை காணமுடிகின்றது. குடிநீருக்கு கூட ஏனையவர்களிடம் கையேந்த வேண்டிய நிலைமையானது இன்று மட்டக்களப்பு படுவான்கரை பிரதேச மக்களுக்கு வந்திருக்கின்றது.

படுவான்கரையினைப்பொறுத்த வரையில் யுதத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் இயற்கை வளம் கொண்ட பகுதியாக இருந்துவந்தது. கிழக்கு தமிழீழத்தினை தமிழர்கள் ஆட்சிசெய்தபோது அதன் தலை நகரங்களாக அதிகளவில் படுவான்கரையே இருந்து வந்தது.

மட்டக்களப்பு வாவியானது மட்டக்களப்பு மாவட்டத்தை ஊடறுத்து வடக்குத் தெற்காக அமைந்துள்ளதுடன் அது மட்டக்களப்பு பிரதேசத்தினை இரு பிரிவுகளாக பிரிக்கின்றது. வாவியின் மேற்குப் பகுதியிலிள்ள நிலப்பரப்பே படுவான்கரை பிரதேசம் என அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதியில் சூரியன் படுவதால் (மறைவதால்) படுவான்கரை என்று அழைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. படுவான்கரைப் பிரதேசம் வளமிக்க விவசாய நிலத்தினைக் கொண்ட பகுதியாகும். அதனால் இப்பிரதேசத்தினை சேர்ந்தவர்கள் அதிகமாக விவசாயத்தினையே தமது பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இங்கு அதிகமாக நெல் பயிரிடப்படுகிறது. மேலும் நிலக்கடலை, சோளம், பயறு போன்ற தானியங்களும், பல மரக்கறி வகைகளும் இப்பிரதேசத்தில் பயிரிடப்படுகின்றன.

படுவான்கரை பிரதேசம் வாவியினால் எல்லையிடப்பட்டுள்ளதுடன், பல ஆறுகளும் ஏரிகளும் படுவான்கரை பிரதேசத்தினூடாக வந்து வாவியில் கலப்பதால் விவசாயத்திற்கு அடுத்ததாக இங்கு மீன்பிடித்தல் கைத்தொழில் கணிசமான அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் படுவான்கரையில் அதிகளவான நிலம் காணப்படுவதன் காரணமாக கால்நடை வளர்ப்பும் அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றது. பண்டைய காலத்தில் போர் வீரர்கள் தங்கும் பகுதியாக படுவான்கரை பகுதியே இருந்தது.



அத்துடன் படுவான்கரை பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகுளங்கள் இருந்திருக்கின்றன. மழை காலங்களில் இக்குளங்களில் நீர் சேகரிக்கப்பட்டு வறட்சியான காலப்பகுதியில் அவை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் இக்குளங்கள் பல கைவிடப்பட்டும் பல குளங்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. இதன்காரணமாக மழை காலங்களில் மழை நீர் வெறுமனே வெள்ள நீராக கடலுடன் கலக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

படுவாகரை பகுதியை எடுத்துக்கொண்டால் போரதீவுப்பற்றில் நவகிரிகுளமும் வவுணதீவில் உன்னிச்சைகுளமும் ஏறாவூர்ப்பற்றில் கித்துள், உறுகாமம்குளங்களும் வாகனேரியில் வாகனேரி குளமுமே இன்று ஓரளவு நீர் சேமித்துவைக்கப்படுகின்றது. இதன் மூலம் ஓரளவு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிலும் உன்னிச்சைகுளத்தின் மூலம் மட்டுமே மக்களுக்கான குடிநீர் திட்டம் முன்னெடுக்கப் படுகின்றது. இந்த குடிநீர் திட்டமானது மட்டக்களப்பின் எழுவான்கரை பகுதியை நோக்காக கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் படுவான்கரை மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லையென்பது கவலைக் குரியதாகவுள்ளது.

ஆண்டுதோறும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பிரதேச செயலகப்பிரிவுகள் குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ளும் பகுதிகளாக காணப்படுகின்றது. போரதீவுப்பற்று, மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர்ப்பற்று, கோறளைப்பற்று வடக்கு ஆகிய பகுதிகள் தொடர்ச்சியாக வறட்சியான காலப்பகுதியில் குடிநீரைப்பெற்றுக்கொள்வதில் கஸ்டங்களை எதிர்கொள்ளும் பகுதியாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இதில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினை தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேச செயலகப்பிரிவுகளும் படுவான்கரை பகுதியிலேயே வருகின்றது.



அனைத்து வளங்களும் கொண்ட படுவான்கரை பகுதியில் ஏன் இந்த நிலைமையென்பது கவலைக்கிடமானதாகவேயுள்ளது. இப்பகுதியில் உள்ள 10ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இந்த நீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் இப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல்வேறு நாடுகள் முன்வந்தபோதிலும் அரசாங்கத்தின் அசிரத்தை காரணமாக அவை செயற்படுத்தப்படாமல் சென்றது. குறிப்பாக கித்துள்,உறுகாமம் இரு குளங்களையும் இணைத்து புனரமைத்து அதன் மூலம் குடிநீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் விவசாய நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டபோதிலும் எவையும் நடைபெறவில்லை.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிறுகுளங்கள் புனரமைக்கப்பட்டு அவை மழை நீரை சேகரிக்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமானால் எதிர்காலத்தில் குடிநீர் பிரச்சினைகளை ஒரளவு தீர்க்கமுடியும். கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மணல் அகழ்வுகளும் இதற்கான காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் உள்ள ஆறுகளை அண்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மணல் அகழ்வுகள் காரணமாக ஆறுகள் ஆளப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக விவசாய நடவடிக்கைகளுக்கு நீரைப்பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டுள்ளதுடன் கிணற்று நீரும் வெயில்காலங்களில் விரைவிலேயே வற்றிவிடும் நிலைமையினையும் காணமுடிகின்றது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும்
# பன்னாட்டுக் குற்றங்கள்

## பகுதி 02

## International Crimes

அதன் படி நியூரம்பேர்க் இராணுவத் தீர்ப்பாயம் “மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்” தொடர்பாகப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியது.

‘அரசியல், இன அல்லது சமயக்குழுக்களின் மீது மேற்கொள்ளப்படும் கொலை, அடிமைப்படுத்துதல், நாடு கடத்துதல் மற்றும் விடாத் துயரளித்தல் ஆகியவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்” என வரையறை செய்யப்பட்டது.

இவ் வரையறுப்பானது மேலும் புத்தாக்கப்படவேண்டும் என அடுத்து வந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள்பார்வைகள் வலியுறுத்தின. ஏனெனில் உள்நாட்டுச் சட்டங்களில் மேற்சொல்லப்படும் குற்றங்கள் தண்டனைக் குரியவையாக இல்லாதிருந்தால் அந்நாடு எவ்வாறு அக்குற்றங்களின் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்பதும் அரசொன்று இவ்வாறான குற்றங்களைத் தனது மக்களின் மீது நிகழ்த்தினால் அவ் அரசைத் தவிர்த்து விடலாமா? என்பதும் மிக முக்கியமான மீள்பார்வைகளாக இம் முதலாவது வரைவிலக்கணத்தின் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களாக இருந்தது.




பன்னாட்டுக் குற்றங்களை வரையறை செய்யும் பணியைத் தொடர்ந்த ரோம் பன்னாட்டு நடைமுறை வரைபு தன்; அகவிதி 7 இன் கீழ் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பவை: “பல்வேறுவகையான நடவடிக்கைகள் ஊடாக யாராயினும் சாதாரண குடிமக்கள் மீது நன்றாகத் தெரிந்து கொண்டே பரவலாகத் தாக்குவது அல்லது திட்டமிட்டவகையில் குறித்துத் தாக்குவது” என வரையறுத்தது. அவ்வரைபில் பின்வரும் குற்றங்கள் மனிதகுலத்திற்கு எதிரானவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. கொலை
2. நிர்மூலமாக்குதல்
3. அடிமைகளாக்குதல்
4. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகளாக வழங்கப்பட்டுள்ளவற்றை மீறும் வகையில் சிறையிலிடுதல் மற்றும் தனது உடலின் மீது தனக்கிருக்கும் சுதந்திரத்தை இழக்கச்செய்து வாட்டுதல்.
5. பொதுமக்களை வலிந்து இடம் பெயர்த்தல் அல்லது நாடு கடத்துதல்
6. சித்திரவதை
7. வன்புணர்வு, பாலியலடிமையாக்குதல், கட்டாயப்படுத்தி விபசாரத்திற்கு தள்ளுதல், கட்டாயக் கருவேற்றல், கட்டாயக் கருவழிப்பு உட்பட அவற்றிற்குச்சமனான பாலியற் கொடுமைகள்.
8. அடையாளங்காணத்தக்க அல்லது அரசியல் கொள்கையினால் இணைந்த இனமொன்றாக, தேசத்தவராக, குலத்தினராக, கலாசாரப் பிரிவினராக, சமயப் பிரவினராக, ஒரு பாலினத்தவராக



அல்லது வேறுயாதாயினும் அடிப்படையில் கூட்டாக அடையாளங் காணத்தக்கவரின்; மீது சட்ட பரிபாலனத்தின் கீழ் குற்றமாக கருதப்படுவதும், பன்னாட்டுச் சட்டப்படி அனுமதிக்கபபடாததுமான குற்றங்களை தொடர்ந்து இழைத்து அவர்களுக்கு விடாத்துயரளித்தல்.
9. வலிந்து காணாமலாக்குதல்
10. நிறவெறி நடவடிக்கைகள்
11. கடுந்துன்பத்தை மனதிற்கிழைக்கும் நடவடிக்கைகள் அல்லது பெருவலியை உடலுக்கோ மனதிற்கோ இழைக்கும் மிருகத்தனமான நடவடிக்கைகள்



முனைவர்
ஸ்ரீஞானேஸ்வன்
பன்னாட்டுக் குற்றங்கள்
பொத்தக ஆசிரியர்,
பட்டய முகாமைக்
கணக்காளர்

ஆகியவை மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் வகைகளாகக் கூறப்பட்டுள்ளன. உலகில் சட்டங்களை உருவாக்கும் பொறிமுறையானது மூன்று வழிகளின் ஊடாக நடைபெறுவதை நீங்கள் அறிவீர்கள். அவை முறையே

1. அந்நாட்டு மக்கள் பிரதிநிதிகளின் சபைகள் அதாவது நாடாளுமன்றங்கள்
2. வழக்காறு என்று சொல்லப்படும் நாம் காலாதிகாலமாகப் பின்பற்றிவரும் பழக்கங்கள் (ஈழத்தைப் பொறுத்தவரை கண்டியச் சட்டம், வடமாகாணத்திற்குரிய ஆதனச் சட்டம் போன்றவை)
3. முற்தீர்ப்புகள் எனப்படும் உயர்நீதிமன்றங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தகுதியவாய்ந்த நீதிமன்றங்களின் தீர்ப்புகள்



என்பவை ஊடாகவே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

அவ்வாறே பன்னாட்டுக்குற்றங்கள் தொடர்பான மிக அண்மைய வரைவிலக்கணங்களை உருவாக்கிச் சட்டமாக்கிய இரண்டு பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள் (முற்தீர்ப்புகள்) வரலாற்றில் பதிவாகியுள்ளன.



அவை முறையே:

1. ருவாண்டாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம்
2. மேனாள் யூகோஸ்லாவியாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம்



அதன்படி ருவாண்டாவிற்கான பன்னாட்டுத் தீர்ப்பாயம் தனது அகவிதி 3 - மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்- இன் கீழ் பின்வரும் குற்றங்கள் தண்டனைக்குரியவை எனச் சட்டமாக்கியது.

1. கொலை.
2. அழித்தொழிப்பு.
3. அடிமையாக்குதல்.
4. நாடு கடத்துதல்.
5. சிறையிடுதல்.
6. சித்திரவதை.
7. வன்புணர்வு.
8. இன, மத, அரசியல் காரணங்களுக்காக

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# ஏட்டுச் சுரைக்காய்

துரைசாமி நடராஜா

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. இதன் தாக்க விளைவுகள் மலையகத்தில் அதிகளவில் எதிரொலிக்கக்கூடிய அபாயநிலை காணப்படுகின்றது. மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுவர்கள் தனித்துவிடப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றமையானது இவ்வபாய நிலைக்கு மேலும் வலுசேர்ப்பதாகவுள்ளது. இதனிடையே சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் வகையில் கடுமையான சட்ட மூலமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டம் குறித்த நிறுவனங் களுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.




நாளைய உலகை படைக்கும் சிற்பிகளாக சிறுவர்கள் விளங்குகின்றார்கள். எனவே இவர்களின் நலன் பேணி சிறந்த முறையில் ஒழுக்கசீலர்களாகவும், நாட்டிற்கு பொருத்தப் பாடுடையவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடு சமூகத்தின் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ளது. சிறுவர்களின் உரிமைகள் பலவுள்ள நிலையில் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. சிறுவர் உரிமைகளை வலியுறுத்தும்சாசனங்கள்பலகாணப்படுகின்றன. இவற்றுள் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைப் பிரகடனம் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. சிறுவர்களின் நலன்களை பேணும் நோக்கில் 1924 இல் ஜெனிவாவில் சிறுவர்களை பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அது சட்ட ரீதியான அங்கீகாரம் பெறாமையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதே வேளை 1948 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. எனினும் இதன் சாதக விளைவுகள் குறைவாக இருந்தன. எனவே 1959 இல் ஐ.நா.பொதுச்சபையினால் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பத்து அம்சங்களை உள்ளடக்கிய சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப் பிரகடனமும் 1924 ம் ஆண்டு பிரகடனத்தைப் போலவே சட்ட வலுவற்றதாகிவிட்டது. இதன் பின்னர் 1989 இல் ஐ.நா.பொதுச்சபையினால் சிறுவர் உரிமைப் பிரகடனம் மீண்டும் உருவாக்கப்பட்டது. இப்பிரகடனம் 1990 இல் சட்ட ரீதியாக அங்கீகாரம் பெறப்பட்டு நடைமுறைக்கு வந்தது. 1991 இல் இலங்கை அரசு இதனை உறுதிப்படுத்தியது. சிறுவர் உரிமைப் பிரகடனமானது சிறுவர்கள் மதிப்பிற்குரியவர்கள் என்பதை வலியுறுத்துவதுடன் சிறுவர்களை முழுமையாக பாதுகாத்து அவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதற்கான சகல அம்சங்களையும் கொண்டதாக விளங்குகின்றது.

இதேவேளை இலங்கையும் சிறுவர் உரிமைகளை பாதுக்காக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. 1883 இல் முதன்முறையாக கோவையாக்கப்பட்ட தண்டனை சட்டக் கோவை மூலம் சிறுவர்களின் பாதுகாப்பு தன்மைக்கான பழைமைவாய்ந்த சட்டங்களின் ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக 1939 ம் ஆண்டில் சிறுவர்கள் மற்றும் இளம் பராயத்தினர் பற்றிய கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இன்று அதிகமாக பாவிக்கப்படுகின்ற ஒரு கட்டளைச் சட்டமாக உள்ளது. இந்தக் கட்டளைச் சட்டம் (CYPO) என்னும் சுருக்கப்பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. 1956 ஆம் ஆண்டு 47 ம் இலக்கம் கொண்ட பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தும் சட்டமானது முறையற்ற விதத்தில் உழைப்பைப் பெறுவதை தடுப்பதற்கான முயற்சியின் முக்கிய திருப்புமுனையாகுமென்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர். 1995 ம் ஆண்டின் 22 ம் இலக்கம் கொண்ட தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 1998ம் ஆண்டின் 27 ம் இலக்கம் கொண்ட நீதிமன்ற ஒழுங்கமைப்பு (திருத்தச்) சட்டம், 1998 ம் ஆண்டின் 28 ம் இலக்கம் கொண்ட குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை (திருத்தச்) சட்டம், 1998 ம் ஆண்டின் 29 ம் இலக்க தண்டனை சட்டக் கோவை (திருத்தச்) சட்டம், 1998 ம் ஆண்டின் 50ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம், 2005 ம் ஆண்டின் 30 ஆம் இலக்க விலைமாதர் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்களை ஈடுபடுத்தலை தவிர்த்தல் மற்றும் அதற்கெதிராக கருமமாற்றல் பற்றிய இணக்கச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் இலங்கையில் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.



1998 ம் ஆண்டின் 50 ம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் மூலம் சிறுவர்களுடைய பாதுகாப்பு பற்றிய வேலைகளைச் செய்யும் பிரதான நிறுவனமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டது. இச்சபையானது சிறுவர் துஷ் பிரயோகங்கள் பற்றிய விசாரணை மற்றும் சட்டத்தை செயற்படுத்துதல், சட்டத்தை திருத்தம் செய்தல், ஆலோசனை வழங்குதல், ஆய்வுகள், சட்ட உதவிகளை பெற்றுக் கொடுத்தல், தேசிய மட்டத்தில் விழிப்புணர்வூட்டல் போன்ற பல கருமங்களை மேற்கொள்ளும். சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் முயற்சியில் 1997 இல் இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்ட கட்டாயக் கல்விச் சட்டம் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. பெண்களுக்கும், சிறுவர்களுக்குமான தனியான பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டமை ஒரு முக்கிய விடயமாகும். இலவசக் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையானது சிறுவர் களின் கல்வி மற்றும் சுகாதார நலன்களுக்கு வலுசேர்ப்பதாகவுள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை.

**மலையக நிலை**

பெருந்தோட்டத் துறையில் 06 - 14 வயதிற்கு உட்பட்ட 10.3 வீதமான ஆண் பிள்ளைகளும்,14.6 வீதமான பெண் பிள்ளைகளும் முழுநேர தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அண்மைய தகவலொன்று வலியுறுத்துகின்றது. இத்தகவலின் படி மொத்தமாக 12.4 வீதமான சிறுவர்கள் முழுநேரத் தொழிலில் ஈடுபட்டுள்ளமை அதிர்ச்சியைத் தருகின்றது. தொழில் நிலையில் சிறுவர்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். எஜமானர்களினால் சூடு வைக்கப்பட்டும், உழைப்பு ரீதியாக கசக்கிப் பிழியப்பட்டும் சில சிறுவர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். பாலியல் ரீதியான தொல்லைகளும் குறைந்ததாக இல்லை. சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இதனை கட்டுப்படுத்துவதென்பது பெரும் சவாலாகியுள்ளது இதேவேளைசிறுவர்பாதுகாப்பு தொடர்பாக பேசுகின்றபோது "வேலியே பயிரை மேய்ந்த" சில சம்பவங்களையும் குறிப்பிட்டாதல வேண்டும்.



சிறுவர் துஷ்பிரயோகங்களின் தொடர்ச்சியானது இன்னும் ஓய்ந்தபாடில்லை. இலை மறைகாயாக பல்வேறு சம்பவங்கள் நாளாந்தம் நடந்து கொண்டிருக்கின்றன. இலங்கையின் களுத்துறையில் ஹோட்டலொன்றிலிருந்து விழுந்து 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்தமை, சிறுவர்களைக் கடத்துதல், களுத்துறை தனியார் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் ஒருவரால் 16 மாணவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை போன்ற அண்மைக்கால சம்பவங்கள் நாட்டு மக்களை கிலி கொள்ளச் செய்திருக்கின்றன. பெற்றோரின் கனவுகளில் மிகவும் முக்கியமானது பிள்ளைகளை நற்பெயருடன் தலை நிமிர்ந்து வாழச் செய்வதாகும். எனினும் சில கயவர்கள் பெற்றோரின் அந்தக் கனவை பிஞ்சிலேயே பறித்தெடுப்பது வேதனைக்குரிய விடயமாகும். பூக்களாகிய சிறுவர்களை நாசம்செய்து அவர்களின் எதிர்காலத்தை பாழ்படுத்துவோர் எவராயினும் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்படுதல் வேண்டும்.




அண்மைக்கால சிறுவர் கடத்தல் மற்றும் துஷ்பிரயோகங்களை பார்க்கும் போது மலையக சமூகத்தினரின் அச்சம் ஏனைய சமூகத்தினரைக் காட்டிலும் இரட்டிப்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சிங்களத் தலைமைகளிடமிருந்து தமிழர்களால் துரும்பைக் கூட பெற்றுக்கொள்ள இயலாது

புகழேந்தி தங்கராஜ்

ஈஸ்டர் குண்டுவெடிப்பின் சூத்திரதாரி யார் என்கிற சந்தேகம் பரவலாக இருந்துவந்த நிலையில், சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டிருக்கும்ஆவணப்படம்அக்கொடியநிகழ்வின் மர்மப் பின்னணியை உரிய சாட்சியங்களுடன் அம்பலப்படுத்தியிருக்கிறது. இதுபோன்ற குற்றச் செயல்களைக் குறித்து விசாரிக்கும் போது, முன் விரோதம், தீவிரவாதம், அரச எதிர்ப்பு, இனத் துவேஷம் - என்கிற கோணங்களில் மட்டுமின்றி, இதனால் ஆதாயமடைந்தவர்கள் யார் என்கிற கோணத்திலான விசாரணையும் முக்கியம். அந்தக் கோணத்தை, தொடர்ந்துவந்த இலங்கை அரசுகள் அலட்சியப்படுத்தின.



அப்போது பதவியிலிருந்த மைத்திரிபாலா அரசு, ஈஸ்டர் குண்டுவெடிப்பைக் காட்டியே ஆட்சியைப் பிடித்த கோட்டபாய ராஜபக்ச அரசு, இப்போதிருக்கும் ரணில் அரசு என்று அனைத்து அரசுகளும், அந்தக் கோணத்தை உதாசீனப்படுத்தின. அது தொடர்பான சந்தேகங்களைப் புறக்கணித்தன. இந்த உதாசீனமும் புறக்கணிப்பும் யதேச்சையானவை அல்ல! திட்டமிடப் பட்டவை. ஈஸ்டர் குண்டுவெடிப்பு எப்படித் திட்டமிடப் பட்டதோ, அதைப்போலவே, அதுதொடர்பான விசாரணைகளில் காட்டப்பட்ட அசிரத்தையும் திட்டமிடப்பட்டதே! மைத்திரிபாலா, கோட்டபாய ராஜபக்ச, ரணில் – என்று பெயர்கள் வெவ்வேறாக இருந்தாலும், அனைத்தும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதை அது உணர்த்தியது.

சம்பவம் நடந்து இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, அதுவும், சனல் நான்கின் மூலம் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட பிறகு, பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிற பரமாத்மாவைப் போல், தன்னுடைய பேய்த்துயில் கலைத்து வாயைத் திறந்து இரண்டு வார்த்தை பேசியிருக்கிறார் சஜித் பிரேமதாஸ. ஈஸ்டர் குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகள் யாரென்பதைக் கண்டுபிடிப்பது உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையால் சாத்தியமில்லை – என்கிற முடிவுக்கு இந்த மனிதர் வர, நாலாண்டு கால ஆராய்ச்சி தேவைப்பட்டிருக்கிறது.



சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால் தான் உண்மை வெளிவரும், உண்மையான சூத்திரதாரி யாரென்பது தெரியவரும் – என்பது சஜித்தின் மிக மிகத் தாமதமான அறிவிப்பு. அவரது இந்தத் தாமதமும், திட்டமிடப்பட்ட தாமதமென்பதில் சந்தேகமேயில்லை. இந்தத் தாமதம், கள்ளத் தாமதம். இத்துணை நாட்களாக சஜித் சாதித்த மௌனம், கள்ள மௌனம். இதை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். இவற்றிலிருந்து, மைத்திரிபாலா முதலான மூன்று மட்டைகளும், இந்த மட்டையும் வெவ்வேறல்ல என்பது தெளிவாகிறது.

இன்று சஜித் சொல்வதைத்தான் கடந்த 14 ஆண்டுகளாக உலகத் தமிழினம் மூச்சுக்கு மூச்சு வலியுறுத்துகிறது. வாகரையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை, கொத்துக் குண்டுகளாலும், மல்டிபேரல் ராக்கெட் லாஞ்சர்களாலும், விமானக் குண்டுவீச்சுகளாலும் விரட்டி விரட்டிக் கொல்லப்பட்ட லட்சத்துக்கும் மேற் பட்ட அப்பாவித் தமிழர்களின் படு கொலைக்குக் காரணமான சூத்திரதாரிகள் யாரென் பதைக் கண்டுபிடிக்க, இனவாதத்தால் செல்லரித்துப்போய்விட்ட இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையால் முடியாது என்பதுதான் தமிழின அழிப்புக்கு நீதி கேட்கும் நாம் முன்வைக்கிற முழுமுதல்வாதம். சிங்கள இனவெறி என்கிற ஒரே குட்டையில் ஊறிய சஜித் என்கிற இந்த மனிதருக்கு, கடந்த 14 ஆண்டுகளாக இது விளங்கவேயில்லை என்பதில் வியப்பதற்கு எதுவுமில்லை. அவர் உடலில் ஓடுவது, சிங்க லே! சிங்கத்தின் ரத்தம்! அது எப்படி, தமிழர் உயிர்களுக்கு நீதி கேட்கும்!



தெற்காசிய நாடுகளில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, பெரும்பான்மை வெறி என்கிற நச்சுப்பாம்புக்குப் பாலூட்டி வளர்க்கிற அரசியல் நபும்சகர்கள் ஒருவர் இருவரல்ல..... பலர்! பெரும்பான்மை மக்களின் வாக்கு வங்கியைக் குறிவைத்து, இதுபோன்ற ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளில் அவர்கள் இறங்குவது படுகேவலமான அரசியல் கலாச்சாரங்களில் ஒன்றாக ஆகிவிட்டது.

சொந்தச் சகோதரர்களையே கொன்று குவித்துவிட்டு, அந்தப் படுகொலைகளுக்கு சிறுபான்மையினத்தவரைப் பொறுப்பாக்கிவிட்டு, ஆட்சி நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொள்கிற நயவஞ்சக அரசியல் நரித்தனம் மனித குலத்தின் பேரவலமாக மாறிக் கொண்டிருக்கிறது. ஆகப் பெரிய ஜனநாயக நாடு என்று தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிற எங்கள் இந்தியாவிலேயே இதுபோன்ற இழிவான நடவடிக்கைகளுக்குப் பஞ்சமில்லை என்கிற நிலையில், மற்ற நாடுகளைக் குறித்துச் சொல்ல என்ன இருக்கிறது!

ஈஸ்டர் குண்டுவெடிப்புகளைக் காட்டி கோட்டபாய ராஜபக்ச என்கிற கொடியவன் அதிபராகிவிட முடிகிற இதே உத்தி தான், 2008லும் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இப்போது தெளிவாகிறது. புலிகளுடனான சமாதான ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக இலங்கை அரசு அறிவித்தவுடனேயே, புத்தளம் அருகில் பள்ளிக் குழந்தைகளின் பேருந்து கண்ணிவெடி மூலம் தகர்க்கப்பட்டதையும், விடுதலைப் புலிகள் என்கிற நேர்மையான விடுதலை அமைப்பின் மீது அதற்கான பழி சுமத்தப்பட்டதையும் நாம் மறந்துவிட முடியாது. அதைக் காட்டி வடித்த நீலிக்கண்ணீர் மூலம்தான், சர்வதேசத்தின் ஆதரவை இனவாத இலங்கை அரசு தேடிக் கொண்டது.

2009ல் திட்டமிட்ட இனப்படுகொலை நடந்த சமயத்தில் சர்வதேசம் சாதித்த மௌனத்துக்கான காரணங்களில், புத்தளம் பேருந்து சம்பவமும் ஒன்று. அது, புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டி, தமிழினத்தை அழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான சூழ்ச்சி. அதன் இன்னொரு வடிவம்தான், ஈஸ்டர் குண்டுவெடிப்புகள். முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டி, நாட்டைப் பாதுகாக்க கோட்டபாயவால் தான் முடியும் என்கிற தோற்றத்தை ஏற்படுத்துவது. இதைத்தான் சனல் 4 அம்பலப்படுத்தியிருக்கிறது.

1983ல் நடந்த திட்டமிட்ட தமிழின அழிப்பின் போது, கொழும்பு வீதி ஒன்றில், தமிழர்கள் பயணம் செய்த பேருந்து ஒன்று பௌத்த பிக்குகளின் நேரடி மேற்பார்வையில் தீக்கிரையாக்கப்பட்டதை இப்போது நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. முன்னதாக, அதிலிருந்த தமிழர்களில் ஒருவர்கூட தப்பித்து விடக்கூடாது என்பதற்காக, புத்தனின் பேரர்கள் பேருந்தின் கதவுகளை அடைத்துவிட்டனர். அந்தப் பேருந்துக்கு வைக்கப்பட்ட தீ, இன்னும் எம் இனத்தின் இதயத்தில் அணையாது எரிந்து கொண்டிருக்கிற அக்கினி ஜுவாலைகளில் ஒன்று!

நிராயுதபாணிகளைத் தடுத்து நிறுத்தி, பேருந்துக்குள் அடைத்து, கண்ணெதிரில் எரித்துக் கொன்ற அந்த சிங்கள பௌத்தக் கோழைகளுக்கும், விமானப்படை வைத்திருந்த முதல் விடுதலை இயக்கம் என்கிற பெருமையைப் பெற்றிருந்தும், அந்த விமானங்கள் மூலம் அலரி மாளிகையை மட்டுமேகுறிவைக்கமுயன்றபுலிகள்என்கிறபேராண்மைபொருந்திய தமிழ்ப் போராளிகளுக்கும் இருக்கிற வித்தியாசத்தை எடுத்தியம்ப, உலகின் வேறெந்த மொழியிலும் வார்த்தைகள் இல்லை. தமிழில் மட்டும் தான் இருக்கிறது 'பேராண்மை' என்கிற பெருமிதத்துக்குரிய அந்த வார்த்தை.

ராணுவ முகாமொன்றை அடித்துத் தகர்த்த உற்சாகத்தில், முகாமின் மீது பறந்த பௌத்த சிங்களத் தேசியக் கொடியைப் போராளிகள் எரித்தனர் என்கிற தகவல் கேட்டு அதிர்ந்துபோன பேராண்மை மிக்கப் பெருந்தலைவனாக பிரபாகரன் என்கிற அந்த மாசுமருவற்ற வீரன் இருந்தான். அந்தத் தளபதிகளை அழைத்து அந்தத் தலைவன் கண்டித்ததும், 'நமக்கு எப்படி புலிக் கொடியோ, அதைப்போலவே அவர்களின் பெருமிதம் சிங்கத்தை உள்ளடக்கிய சிங்களக் கொடி.... இப்படியெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்வது அறிவுடைமையல்ல.... வீரமுமல்ல' என்று, தன் குழந்தைகளுக்குப் போதித்த தாய்ப்பனை அவன்.



பள்ளிப் பேருந்துக்கு குண்டுவைத்துவிட்டு, அந்தப் பழியையும் தன் மீது சுமத்த முயன்ற ஒரு இனவெறி அரசின் இழிவான நடவடிக்கை, அந்த மாமனிதனை எப்படியெல்லாம் பாதித்திருக்கும் என்பதை 15 ஆண்டுகள் கழித்து நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# சிறிலங்காவின் காவல்துறை என்றுமே தமிழர்களுக்கு நீதியை வழங்கியதில்லை

**ஸ்ரிவன் புஸ்பராஜா. க**
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

சர்வதேச காவல்துறை ஒத்துழைப்பு தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் 7-ம் திகதி கொண்டாடப்படுகிறது. காவல்துறையினரிடையே சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும், குற்றங்களை எதிர்த்துப் போராட ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கும் இது ஒரு சிறந்த நாளாக அமையும். ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் சர்வதேச காவல்துறை ஒத்துழைப்புத் தினத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐநாவின் 195 உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சர்வதேச காவல் துறை ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு தினம் அங்கீகரிக்கப்பட்டது.



ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை சிறிலங்காவின் காவல்துறை என்றுமே தமிழர்களுக்கு சட்டத்தின் ஆட்சிக்கோ நீதியை மதித்தோ ஒத்துழைப்பு வழங்கியதில்லை. நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் சிறிலங்கா காவல் துறையின் அணுகுமுறைகளும் வார்த்தைப் பிரயோகங்களும் மனித உரிமை மீறல்களும் மிகவும் அருவருக்கத்தக்க வகையிலேயே இருந்தது. "அடோ பண்டி", "பறத்தெமிலு" போன்ற வாய் கூசும் வார்த்தைகளால் இனவெறியைக் கக்கி தமிழர்களைத் திட்டியது இன்றும் எமது காதுகளில் ஒலித்துக்கொண்டு தான் உள்ளது. "காக்கி" நிற சீருடைகளைக் கண்டாலே அருவருப்பான உணர்வு ஏற்படும் வகையில் தான் சிறிலங்கா காவல்துறையின் அணுகுமுறைகள் இருந்தன.



சர்வதேச மனித உரிமைச்சட்டங்களுக்கு அமைய காவல்துறையினர் நேர்மையாகவும், மரியாதையாகவும், நியாயமாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் எப்போதும் சட்டத்தை நிலைநிறுத்தி தமது கடமையைப் பாரபட்சம் இன்றி செய்யவேண்டும் மற்றும் அவர்கள் இனம், மதம் அல்லது சாதி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களின் உரிமைகளையும் நடுநிலையாக நின்று பாதுகாக்க வேண்டும். ஆனால் சிறிலங்காவில் காவல்துறையின் செயற்பாடுகள் இனத்துவேசம் மற்றும் மதவெறி கொண்டே செயற்பட்டு வருகிறது. மனிதாபிமானமற்ற இழிவான நடத்தையுடனேயே சிறிலங்கா காவல்துறை இன்று வரை இயங்கி வருகிறது.



தன்னிச்சையான கைதுகள், சித்திரவதைகள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உள்ளிட்ட தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் இலங்கை காவல்துறை குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சிறிலங்கா காவல்துறையின் அதிகார வரம்புமீறல்களை சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் ஆவணப்படுத்திக் கொண்டு தான் இருக்கின்றன. வழமைபோல சிறிலங்கா அரசும் இந்தக் குற்றச் சாட்டுகளை மறுத்துக் கொண்டு தான் இருக்கிறது.



சிறிலங்கா காவல்துறையில் ஊழல் நீண்ட காலமாக நிலவி வரும் ஒரு முக்கிய பிரச்சினை. முக்கியமாக வடக்கு கிழக்கில் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகள் லஞ்சம் வாங்குதல், தமிழர்களை மிரட்டி பணம் பறித்தல் மற்றும் பிற ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற குற்றச்சாட்டுகள் இன்று வரை உள்ளன.



1956ம் ஆண்டு காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது தமிழ் அரசியல் வாதிகளை அடித்து நொருக்கியது, 1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகள், 1981ம் ஆண்டு தொன்மையான யாழ் நூல்நிலைய எரிப்பு உட்பட சிறிலங்கா காவல்துறை ஈழத்தமிழர்களுக்கு செய்த கொடுமைகள் சொல்லில் அடங்கா. 2015 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகம் இலங்கை காவல்துறையின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்தது. சிறிலங்கா காவல்துறை ஈழத்தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்கான நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருப்பதாக கண்டறிந்து விசேட அறிக்கையை ஐநா சபைக்குச் சமர்ப்பித்துள்ளார்.



சர்வதேச காவல்துறை ஒத்துழைப்பு தினம் காவல்துறையின் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை பிரதிபலிப்பதற்கும் காவல் துறையினரின் மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் ஒரு வாய்ப்பான தினமாகும். சிங்கள அரச காவல்துறையின் அதிகார எல்லை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரவும், அவர்களுக்கு நீதி கோரவும் இந்த நாளை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

• • •

# ஒலிவக் கிளைகளும் வெற்றிக் குறியீடுகளும்: பாலஸ்தீன மக்களைக் கைவிட்ட ஒஸ்லோ ஒப்பந்தங்கள்

*1993ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம், 13ம் திகதி, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜெனின் நகரத்தின் வீதிகளிலே ஏனைய மக்களுடன் தானும் வலம் வந்ததை சாடே எர்ஸ்ஹயிட் (Saadeh Ersheid) நினைவுகூர்ந்தார்.*

அந்த நேரத்தில், அமெரிக்காவிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த செய்திகளைக் கேட்டு, அங்கே இருந்த மக்களில் பலர் வெற்றிக் குறிகளைக் காட்டித் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அதே நேரம், ஏனையோருக்கு அந்தச் செய்திகள் குழப்பத்தையே தந்திருந்தன.

தமது அரசையும் தாம் தாபிக்கலாம் என்ற நம்பிக்கையில், இஸ்ரேல் ஒரு சட்டபூர்வமான அரசு என்று அந்த நேரத்தில் பாலஸ்தீனத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.



பல மாதங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்து, ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் நிறைவுபெற்ற வேளையில், பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரான யாசீர் அரபாத்தும் (Yasir Arafat) இஸ்ரேலின் பிரதம மந்திரியான யிற்ஷாக் றாபீனும் (Yitzhak Rabin) வெள்ளைமாளிகைக்கு வெளியேகைகுலுக்குவதை பல இலட்சக்கணக்கான பாலஸ்தீனர்கள்

தமது வீடுகளிலே இருந்து கொண்டு தொலைக்காட்சிகளில் கண்டுகளித்தனர்.

"இளையோர் குழு ஒன்று இஸ்ரேல் இராணுவத்தின் ஒரு வாகனத்தை நோக்கி ஓடிச் சென்று, அந்த வாகனத்திலே ஏறி, அதன் மேற்புறத்திலே ஒரு ஒலிவ மரக்கிளையை வைத்ததைப் பார்த்தேன்" என்று எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான 68 வயதான எர்ஸ்ஹயிட் குறிப்பிட்டார்.

அந்தக் காட்சி இஸ்ரேல் இராணுவத்தினருக்கு வேடிக்கையாக இருந்தது மட்டுமன்றி, அந்த இளையோரை அவர்கள் கேலியும் செய்தார்கள்.




பல ஆண்டுகளாகப் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குள் நிலவிய மிக மோசமான நிதிநெருக்கடியைத் தொடர்ந்தும், பாலஸ்தீன மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களை இஸ்ரேல் வன்முறையாக அடக்கிய நிகழ்வுகளைத் தொடர்ந்தும் அந்த 'அமைதி ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டது. ஏறத்தாழ 1000 பாலஸ்தீனர்களின் உயிர்களைக் காவுகொண்ட முதலாவது இன்றிபாடா அல்லது கிளர்ச்சியின் முடிவை அந்த நிகழ்வுகள் சுட்டிக்காட்டின.

அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த அமைதி ஒப்பந்தத்துக்கு முன்னர் பாலஸ்தீனர்கள் பலர் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருந்தனர்.

"ஒஸ்லோ ஒப்பந்தம் ஒரு வெற்றியாகவே அந்த நேரம் முன்வைக்கப்பட்டது. அல்லது அவர்களது மோசமான நிலையில் இருந்து அவர்களை விடுவிக்கின்ற ஒன்றாகவும் பார்க்கப்பட்டது" என்று அவர் மேலும் கூறினார்.

'இரு அரசுத் தீர்வு' என்பதை நோக்காகக் கொண்டு, பேச்சுவார்த்தைகளை மீளவும் தொடங்கும் இலக்குடன் ஒப்பந்தத்தின் இரண்டாவது பகுதி, 1995ம் ஆண்டில் கைச்சாத் திடப்பட்டது – விசேடமாக ஓர் இடைக்காலப் பாலஸ்தீன அரசு ஒன்றை நிறுவி, காலப்போக்கில் ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசை நிறுவுவதே அந்த நேரத்தில் ஒப்பந்தத்தின் நோக்கமாக இருந்தது.




பாலஸ்தீனத்தில் தேர்தலை நடத்துவதற்கு அந்த ஒப்பந்தம் வழிவகுத்ததுடன், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு 5வருட ஆயுளும் வழங்கப்பட்டது. அந்த முன்னோடி அரசு இன்றும் தொடர்கிறது. ஆனால் அந்த அரசில் ஊழல்கள் மலிந்திருப்பதாகவும், அதன் காவல்துறை மக்களைக் கொடுமையான விதத்தில் நடத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் அந்த அரசின் மேல் வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்குக் கரையில் சில பகுதிகளில், அவர்கள் தமது சொந்த ஆட்சியை மேற்கொள்வதற்கான அனுமதி இருந்த போதிலும், அப்பிரதேசம் முழுவதையும் இஸ்ரேல் தனது முழுமையான இராணுவக்கட்டுப்பாட்டினுள் இன்னும் வைத்திருக்கிறது.

உண்மையான ஒரு தீர்வுக்கு வழிவகுப்பதற்குப் பதிலாக, பொருண்மிய ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் இஸ்ரேலின் மேலாண்மையைப் பாதுகாப்பதற்காகவே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

### ஒப்பந்தங்கள் தோல்வியடைந்தது ஏன்?

பிரதேச வரையறை தொடர்பான பிரச்சினைகள், சட்டவிரோத யூத குடியிருப்புகள், ஜெருசலத்தின் நிலை, பாலஸ்தீன அகதிகள், மீண்டும் திரும்பி வருவதற்கான உரிமை போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படாததனால், மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தோல்வியில் முடியும் என்பதைப் பாலஸ்தீனத் தலைவர்கள் முன்கூட்டியே உணர்ந்திருந்தார்கள்.

மிகவும் சர்ச்சைக்குரியதாக அந்த நேரம் கருதப்பட்ட இஸ்ரேல், பாலஸ்தீன அதிகாரங்களுக் கிடையிலான இணைந்த பாதுகாப்புச் செயற்பாடும் அப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழில்: ஜெயந்திரன்

அதே நேரம், இஸ்ரேல் அரசைப் பொறுத்த மட்டில், ஒப்பந்தம் ஒரு தோல்வி அல்ல என்று சிரக்கியூஸ் பல்கலைக்கழகத்தில் அமெரிக்க மற்றும் மத்திய கிழக்கு வரலாற்றுப் பேராசிரியரான ஒசாமா காலில் (Osama Khalil) கருத்துத் தெரிவித்தார்.

நடைமுறைச் சாத்தியமான ஒரு சுதந்திர பாலஸ்தீன அரசு உருவாகுவதற்கு இணங்குவதற்கு இஸ்ரேல் ஒருபோதுமே தயாராக இருக்கவில்லை என்று காலில் அல்ஜஸீராவுக்குக் கூறினார்.

முடிவற்ற பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில், தனது ஆக்கிரமிப்பு மற்றும் குடியேற்றக் கொள்கைகளை எந்தவித பிரச்சினையும் இன்றி இவ்வாறு இஸ்ரேலினால் தொடர முடிந்தது.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காத் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றுகின்ற அலா ராட்டீர் இக்கருத்தை ஏற்றுக்கொண்டார். 30 வருடங்களுக்கு மேலாகத் தனது ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து முன்னெடுத்து, பாலஸ்தீனத்தின் மேலும் பாலஸ்தீன மக்களின் மேலும் தனது காலனியக் கட்டுப்பாட்டைத் தக்க வைப்பதற்கு, பன்னாட்டு ஆதரவுடன் கூடிய ஒரு கட்டமைப்பை ஒப்பந்தம் இஸ்ரேலுக்கு வழங்கியிருந்தது.

"சுதந்திரத்தையும் தன்னாட்சியையும் பாலஸ்தீனம் எந்தவகையிலும் அடையாத வகையில் ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுக் கட்டமைக்கப்பட்டிருந்தது" என்று ராட்டீர் அல் ஜஸீராவுக்குத் தெரிவித்தார்.




இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமை, பாலஸ்தீனத்தின் மேல் இன்றுவரை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டைத் தொடருவதற்கு வழிவகுத்திருக்கிறது. பாலஸ்தீனர்கள் மேல் ஓர் இனவேற்றுமைக்கொள்கையை இஸ்ரேல் கடைப்பிடித்துவருவதாக மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் விவாதிக்கின்றன.

### மேற்குக்கரையைத் தம்முடன் இணைத்துக்கொள்ள இஸ்ரேல் விரும்புவதன் காரணம் என்ன?

பாலஸ்தீன மக்களின் நடமாடுவதற்கான உரிமையை மறுத்து, பாலஸ்தீன வளங்களைச் சூறையாடி, அன்றாடம் பாலஸ்தீனர்களைக் கைதுசெய்ய வழிவகுக்கின்ற சட்டவிரோத யூதக் குடியிருப்புகளை, தொடர்ந்து வருகின்ற இஸ்ரேல் அரசுகள் நிறுத்தக்கூடிய அழுத்தத்தை பாலஸ்தீன அதிகாரத்தினால் கொடுக்க முடியவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர், பாதுகாப்பை நோக்காகக் கொண்டு பாலஸ்தீனர்களின் நாளாந்த வாழ்க்கையுடன் மட்டும் இஸ்ரேல் தலையிட்டு வந்தது.

எந்தவிதமான எதிர்ப்பையும் பாலஸ்தீனர்கள் முன்னெடுக்காது பார்த்த அதே நேரம், தமது

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ஏட்டுச் சுரை ... தொடர்ச்சி ...

பாகியுள்ளது. மலையக பெருந்தோட்ட பகுதிகளில் சிறுவர்கள் தனித்துவிடப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொழில் நிமித்தம் வேலைத் தளத்திற்கு செல்வதன் காரணமாக லயன்களில் 5 வயதுக்கும் குறைந்த சில சிறுவர்கள் வயோதிபர்களின் பாதுகாப்பில் இருந்து வருகின்றனர். வயோதிபர்களின் உடல் நிலை மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக நோக்குகையில் இவர்களால் உரியவாறு சிறுவர்களை பராமரிக்க முடியுமா என்ற கேள்வியெழுகின்றது. இத்தகைய நிலைமைகள் சிறுவர்களின் பாதுகாப்பினை கேள்விக்குறியாக்கி வருகின்றன. இதேவேளை 3.8 வீதமான சிறுவர்கள் எவ்வித குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடாது வெறுமனே தோட்டத்தில் சுற்றித்திரிவதாக அதிர்ச்சிதரும் அண்மைய தகவலொன்று வலியுறுத்துகின்றது. இத்தகையோரும் தனித்துள்ள சந்தர்ப்பங்கள் அதிகமாகும் என்ற நிலையில் இவர்களின் பாதுகாப்பு தொடர்பிலும் நாம் அதிகமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் பாடசாலைகள் அநேகமாக கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் உரிய வாகன வசதியின்றி போக்குவரத்து சிரமங்களுக்கு மத்தியிலேயே பாடசாலைக்கு சென்று தமது கல்வியைத் தொடருகின்றனர். இந்நிலையில் இத்தகைய மாணவர்கள் பெரும்பாலும் நடந்து சென்று கல்வி பயில்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதன்போது மாணவர்கள் கடத்தும் அல்லது துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே இத்தகைய மாணவர்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. இது தொடர்பில் பெற்றோர், பாதுகாவலர், நலன்விரும்பிகள் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு சிறுவர்களை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்து அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். இந்நிலையில் இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய கவனம் செலுத்தியுள்ளார். சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கு கடுமையான சட்டமூலங்களை தயாரிக்குமாறு அவர் சட்டம் குறித்த நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். குறித்த சட்டமூலம் சிறுவர் பாதுகாப்புக்கான பிரத்தியேகமானதாக அமைய வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் பல ஏட்டளவில் இருந்தபோதும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடு தொடர்பில் திருப்தி கொள்ள முடியவில்லை. சட்டங்களின் வலுவிழந்த தன்மையையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் புதிய சட்டங்களை ஆக்குவதை விடுத்து உள்ள சட்டங்களை உரியவாறு அமுல்படுத்தினாலே போதும் என்பதோடு இது சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு உந்துசக்தியாக அமையும் என்று பலர் பேசிக் கொள்வதனையும் கேட்க முடிகின்றது

• • •

## ஒலிவக் கிளை ... தொடர்ச்சி ...

ஆக்கிரமிப்பை பாலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இஸ்ரேல் நிர்ப்பந்தித்தது.

வேலைக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கி, அல்லது வேறு சலுகைகளைச் செய்து முக்கிய பிரச்சினைகளிலிருந்து மக்கள் திசைதிருப்பப்பட்டனர்.

தேசிய ரீதியான எதிர்ப்பையும் எழுச்சியையும் தடுக்க வேலைவாய்ப்பு அவ்வேளையில் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டது.

”பாலஸ்தீன மக்களின் முதலாவது எழுச்சிக்கு (intifada) முன் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளும் அந்த மக்களை மிகவும் குரூரமாக நடத்தும் செயற்பாடுகளும் அங்கு மலிந்திருந்தன” என்று ஏர்ஸ்ஹயிட் மேலும் தெரிவித்தார். சோதனைச்சாவடிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்ததுடன் கைதுகள், வீடுகள் அழிக்கப்படுதல், மக்களின் நிலங்களைப் பறித்தல் போன்ற விடயங்கள் தாராளமாவே நடைபெற்றுக்கொண்டிருந்தன.

முதலாவது எழுச்சிக்குப் பின் ஆக்கிரமிப்பு இன்னும் கடுமையானதாக மாறியது. ”இப்போது இரும்புக்கரம் கொண்டு அவர்கள் எங்களை அடக்கத்தொடங்கினார்கள்” என்றார் ஏர்ஸ்ஹயிட்.

பாலஸ்தீன கிளர்ச்சியாளர்களின் எலும்புகளை உடைக்குமாறு அந்த நேரத்தில் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய றாபின், இராணுவ அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தார். வீதிகளில் எதிர்ப்பை வெளிப்படுத்தியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இவ்வாறாகவே கையாளப்பட்டார்கள்.

### பாலஸ்தீன மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்துதல்

பொதுமக்களின் ஈடுபாடு, பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஒத்துழையாமை இயக்கம், பகிஷ்கரிப்பு இயக்கம் போன்றவை முதலாவது எழுச்சியின் போது மிக அதிகமாக இடம் பெற்றிருந்தன.

பொருண்மிய சுயாதீனத் தன்மையை உருவாக்குவது மட்டும் அவர்களது தேவையாக இருக்கவில்லை. இஸ்ரேலில் தொழில் புரிவதற்கு மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது மட்டுமன்றி, லெபனானில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து, பாலஸ்தீன விடுதலை இயக்கம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்ததன் காரணத்தினால், அவர்களது நிதிப்பலம் மிகவும் விரைவாகக் குறையத் தொடங்கியது.

உண்மையில் 1981ம் ஆண்டிலேயே ஒருவரையொருவர் அங்கீகரிக்கும் உடன்பாட்டுக்குத் தாம் தயாராக இருப்பதாக அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்திருந்தது.

1993ம் ஆண்டளவில் பிரதேச மற்றும் பன்னாட்டுச் சூழல், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு சாதகமற்றதாகவே அமைந்திருந்தது.

காலீலைப் பொறுத்தவரையில், ஒப்பந்தங்கள் பாலஸ்தீன மக்களின் ஒற்றுமைக்கு மிகவும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

புவியியல் ரீதியாக, மேற்குக்கரைப் பிரதேசம், காஸா, கிழக்கு ஜெரூஸலம் என்று பாலஸ்தீன மக்கள் பிளவுபடுத்தப்பட்டிருந்தார்கள். அதே நேரம் பாலஸ்தீன மக்கள் புலம்பெயர்ந்து, அகதிகளாகப் பல நாடுகளில் வாழ்ந்ததுடன், இஸ்ரேலின் குடிமக்களான பாலஸ்தீன் மக்களும் இருந்தார்கள்.

ஒப்பந்தங்கள் தொடர்பான வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகள் பாலஸ்தீன மக்களை இன்னும் அதிகமான பிளவுநிலைக்குத் தள்ளியிருந்தன.

### ஒஸ்லோ ஒப்பந்தங்களில் நோர்வே ஈடுபட்டிருந்ததற்கான காரணம் என்ன?

ஒப்பந்தங்கள் பாலஸ்தீன மக்களை, முன்னரைவிடப் பலவீனமானவர்களாகவும், கூறுபோடப்பட்டவர்களாகவும், அரசு என்ற நிலையிலிருந்து தூரவிலக்கப்பட்டவர்களாகவும் ஆக்கியது.

வர்த்தகம், விவசாயம், உள்ளிட்ட பாலஸ்தீனப் பொருண்மியத்தின் அனைத்துப் பரிமாணங்களும் இஸ்ரேலில் தங்கியிருக்கும் வகையிலேயே இந்த ஒப்பந்தங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலை இருந்த போதிலும், குறைந்த திறன் தொழிலாளர்களாக இஸ்ரேலில் தொழில்புரிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மக்களின் பொருண்மிய நிலையை மேம்படுத்த பாலஸ்தீன அதிகாரம் உருப்படியாக எதுவும் செய்யவில்லை.

பாலஸ்தீன அதிகாரம் தன்னைத் தக்க வைத்துக்கொள்ள பன்னாட்டு நிதி வழங்குநர்களிலும் வெளிநாட்டு உதவிகளிலுமே பெருமளவில் தங்கியிருப்பது மட்டுமன்றி, உள்நாட்டின் உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதற்குப் பதிலாக, அரச பணியாளர்களுக்கான வேதனத்தை வழங்குவதிலேயே தமக்குக் கிடைத்த நிதியின் பெரும் பங்கைப் பயன்படுத்தியிருக்கின்றன.

அவர்களின் கொள்கைகளின் காரணமாக, குறிப்பாக மாற்றுக் கருத்தைக் கொண்டவர்களை அடக்கியாள்வதன் காரணமாக, பாலஸ்தீன அதிகாரத்துக்கு மாற்றீடாக வரக்கூடிய நல்ல தலைமைத்துவம் எதுவும் அங்கே உருவாகவில்லை.

அதிபருக்கான கடைசித் தேர்தல் 2005ம் ஆண்டு நடைபெற்றது. இக்காலப் பகுதியில் பாலஸ்தீன அதிகாரத்துக்குத் தலைமை தாங்கும் பற்றாவுக்கும் (Fatah) 2007ம் ஆண்டிலிருந்து காஸாப் பிரதேசத்தைப் பரிபாலித்து வரும் ஹமாசுக்கும் (Hamas) இடையே முக்கிய பிளவு ஏற்பட்டது. இவர்களுக்கு இடையே உள்ள பிளவைச் சீர்செய்ய எடுக்கப்பட்ட பல முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே பாலஸ்தீன அதிகாரம் ஏற்படுத்தப்பட்டது என்று காலீல் குறிப்பிட்டார். பாலஸ்தீன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் அது வடிவமைக்கப்படவில்லை.

பாலஸ்தீன அதிகாரத்தின் தலைமைத்துவமாக இருந்தாலென்ன அமெரிக்காவாக இருந்தாலென்ன இஸ்ரேலாக இருந்தாலென்ன இவை எதுவுமே தேர்தல் புதிதாக நடத்தப்படுவதை விரும்பவில்லை. தம்மால் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் வெற்றிபெறுவார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே தேர்தலுக்கு அவர்கள் உடன்படுவார்கள்.

**நன்றி: அல்ஜஸீரா**

## அனைத்துலக ... தொடர்ச்சி ...

வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இலங்கை அரசு தொடர்புகளை பேணவேண்டும். தீர்மானம் 51/1 பிரகாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு நிலைமைகளை கண்காணிக்க ஐ.நாவுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் அனைத்துலக தரத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டும். என்பன அதில் உள்ள முக்கிய கேரிக்கைகள் ஆகும்.

அதாவது மனித உரிமை மீறல்கள் அல்லது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மூலம் ஐ.நா இலங்கைக்குள் உள்நுழைவதற்கான சாத்தியங்களை தேடுவதாகவே இந்த அறிக்கைகளை பார்க்க முடியும்.

மேற்குலகத்தின் இந்த நகர்வை அறிந்த இந்தியா தற்போது தனது அழுத்தத்தை அதிகரிக்க முற்பட்டுவருவதை தான் அதன் அறிக்கை காட்டுகின்றது.

அதாவது அனைத்துலக சமூகத்தை தொடர்ந்து ஏமாற்ற முடியாத ஒரு நிலைக்கு இலங்கை மெல்ல மெல்ல தள்ளப்படுவதை உணரமுடிகின்றது.

## ஜெனிவாவை ... தொடர்ச்சி ...

உரிமை சார்ந்த விடயத்தை திசை திருப்பும் அல்லது பின் தள்ளுவதாக அமையும் அதற்கான முன்னெடுப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**ஜெனிவா கூட்டத் தொடரில் நீங்களும் கலந்து கொள்ளவிருப்பதாக அறிய முடிகின்றது. இங்கு உங்களுடைய பங்களிப்பு எவ்வாறானதாக இருக்கப்போகின்றது?**

உண்மையில் நான் ஒரு அவதானிப்பாளராகத்தான் அந்த கூட்டத்தொடரில் என்னால் கலந்து கொள்ள முடியும். இது முதல் தடவை அந்த சந்தர்ப்பம் கிடைக்கின்ற பொழுது அந்த கூட்டத்தின் அவதானிப்பாளராக கலந்து கொள்ள முடியும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்ற பொழுது இலங்கையில் இருக்கின்ற உண்மையான நிலவரங்களை சொல்லக் கூடியதாக இருக்கும். அதேபோல் நேரடியாக எனது அனுபவங்களையும் இந்த மண்ணில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியையும் கட்டமைக்கப்படுகின்ற இன அழிப்பையும் கட்டவிழ்த்துபடுகின்ற பௌத்த மயமாக்கல், இராணுவ மயமாக்கல், நில அவகரிப்புக்கள் சமயங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்கும் அரசின் அண்மையில் திட்டமிட்ட செயல்களை சந்தர்ப்பம் கிடைக்கின்ற பொழுது உண்மையில் என்னால் பகிர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்

**தமிழ்த் தரப்புகள் கூட்டாக ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை வகுக்காமலிருப்பது தமிழத் தரப்பை பலவீனப்படுத்துவதாக உள்ளதா? இதனை மாற்றியமைக்க என்ன செய்ய முடியும்?**

உண்மையில் அரசு தமிழ் தரப்பை பலவீனப்படுத்துகிறது இரண்டாவது தமிழ் மக்கள் சார்ந்து செயற்படுகின்ற செயற்பாட்டாளர்கள் சிவில் தமிழ்த் செயற்பாட்டாளர்களுக்கு இடையிலும் பிரிவினையை கொண்டுவர முனைகிறது ஆகவே அரசு காலம் காலமாக தமிழருக்குள்ளே பிரித்தாளும் யுக்தியை கையாண்டு அதில் பெரிய வெற்றியும் கண்டுள்ளது ஆனால் அதையும் தாண்டி பார்க்கின்றபோது தமிழ் தரப்பில் அதிலும் சிறப்பாக தமிழ் அரசியல் தரப்பில் தமிழ் தேசியத்தின் பேரிலே அரசியல் செய்கிறோம் தமிழ மக்களுக்கான உரிமைக்காக செயற்படுகிறோம் என்று கூறும் அவர்களுக்கு கூட ஒரு ராஜதந்திர அணுகுமுறை இல்லை ஒரு தூரநோக்கான பார்வை இல்லை ஆகவே தமிழ் மக்கள் உரிமை சார்ந்த அரசியலை வெறும் தேறுதல் அரசியலுக்குள்ளும் தம்மை அடுத்த நிலைக்கு உயர்த்துகின்ற அரசியலுக்குள்ளும் தமிழ் தலைவர்கள் அல்லது தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற வர்கள் மட்டுப்படுத்தி வைத்திருப்பது துரதிட்டவசமானதொன்று.

ஆகவே அவர்களுக்குள் ராஜதந்திர பார்வை இல்லை தூரநோக்கு இல்லை தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த அரசியலை அவர்களுடைய தீர்வை நோக்கி நகர்த்தவேண்டிய சாணக்கியமும் அந்த கட்டுக்கோப்பும் அவர்களுக்கு இல்லை வெறும் தேறுதல் அரசியலுக்குள்ளே தம்மை வழக்க அல்லது அரசியலில் தம்மை தக்க வைக்க இவர்களுக்குள் கட்டமைத்து கொண்டிருப்பது மிகவும் துன்பமானதும் ஒரு துயரமானதொரு விடயமாகும்

ஆகவே தமிழ் தரப்பு நிச்சயமாக பொதுவான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று சொன்னால் இந்த நிலையில் இருந்து வெளியே வந்து தமிழ் மக்களுடைய பொதுவாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சிவில் செயற்பாட்டாளர்கள் உண்மையான புத்திஜீவிகளை கொண்டு இதற்காக ஒரு தூரநோக்கு பொறிமுறையை வைத்து அதன் ஊடாக இதனை கட்டமைக்கப்பட வேண்டும்

**புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து செயற்படும் தமிழ் அமைப்புக்கள் இவ்விடயத்தில் முன்னெடுத்துவரும் பணிகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

உண்மையில் புலம்பெயர் அமைப்புக்கள் தமிழ் தேசியத்தின் பார்வையில் உள்ள அமைப்புக்கள் பாதிகப்பட்ட எங்களுடைய தமிழ் மக்கள் உதவி செய்ய வேண்டும் என்று இருக்கின்ற அமைப்புக்கள் உண்மையில் முழு மூச்சுடன் இருக்கிறார்கள் அவர்களுடைய அந்த செயற்பாடுகள் வரவேற்க தக்கது ஆனாலும் சில வேளைகளில் அவர்களுக்குள் இருக்கின்ற பிளவுகளும் அவர்களுக்குள் இருக்கின்ற போட்டி தன்மைகளும் எமக்கான நீதி கிடைக்கின்ற அந்த கூட்டு முயற்சிக்கு சவால் அழிப்பதாக இருக்கின்றது ஆகவே நாங்கள் பிளவுகளை மறந்து எங்களுக்குள்ளே பிரிவினைகளை மறந்து ஒன்று பட்டு செயற்படுவது எங்களது தார்மீக கடமைகளில் ஒன்றாக இருக்கின்றது

• • •

## மட்டக்களப்பு ... தொடர்ச்சி ...

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சைகுளத்திலிருந்தே மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் செய்யப்படும் நிலையில் வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் மக்கள் குடிநீரைப்பெற்றுக்கொள்வதில் கஸ்டங்களையே எதிர்நோக்கிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் கடும் வரட்சி நிலையுடனான காலநிலை காரணமாக மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெடியமடு, பாவக்கொடிசேனை உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் குடிநீரின்றி தாம் தினமும் சிரமப்படுவதாகவும், குடிநீருக்காக மிக நீண்ட தூரம் பயணித்து குடிநீரைப் பெற்றுக் கொள்ள வேண்டி துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமாகவும் கடந்தகால யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட அம்மக்கள் தினமும் அதிகாலை வேளையில் குடிநீர் எடுப்பதற்காக மிக நீண்ட தூரம் கால் நடையாகச் செல்லும்போது காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு உட்படுவதாகவும், தொடர்ந்து அச்சத்துடன் பயணித்து குடிநீரைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் தமது பிள்ளைகள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு செல்வதில் சிரமம் உள்ளதாகவும் தெரிவிக்கின்ற னர்.

தொடரும் வறட்சி நிலைமை காரணமாக மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 2000க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் பிரதான தொழிலாக காணப்படும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பும், என்பன இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குரிய பச்சைப் புற்கள் தற்போது கருகிய நிலையில் காணப்படுவதாகவும் கால்நடைகள் குடிநீர் இன்றி அலைந்து திரிவதாகவும் அப்பகுதியை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான வறட்சி நிலைமைகளானது யுத்ததின் பின்னரே இப்பகுதி மக்கள் அதிகளவில் எதிர்கொள்கின்றனர். படுவான்கரையின் இயற்கை வளங்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டன. பெரியளவிலான மரங்கள் அழிக்கப்பட்டன. இதன்காரணமாக படுவான்கரையில் வறட்சியின் கோரத்தாண்டவம் நிலவுகின்றது. இதனை போக்குவதற்கு பசுமை வேலைத்திட்டங்களும் சிறிய குளங்களை புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கவேண்டும்.

• • •

## ஆயுத - தொழில் ... தொடர்ச்சி ...

தயாரிக்கும் நிறுவனத்திற்கு *(cosmonaut's space suit)* பூட்டீனுடன் சென்றிருந்தார்.

ஏவுதளத்தை பார்வையிட்ட அவர் செய்மதிகளை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்திற்கு ரஸ்யாவின் தொழில்நுட்ப உதவிகளை கோரி யிருந்தார். அதற்கு சம்மதம் தெரிவித்த ரஸ்ய அதிபர் வடகொரியாவுக்கு வருமாறு கிம் விடுத்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டுள்ளார். ரஸ்ய அதிபரின் பயண ஏற்பாடுகளை கவனிப்பதற்காக ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் லாரோவ் எதிர்வரும் மாதம் வடகொரியா செல்லவுள்ளார்.

செய்மதிகளை ஏவுவதற்கு வடகொரியா அண்மையில் மேற்கொண்ட இரண்டு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் ரஸ்யாவின் நவீன தாக்குதல் விமானங்களான எஸ்.யூ 35 மற்றும் எஸ்.யூ 57 என்பன உற்பத்தி செய்யப்படும் நிலையத்தையும் கிம் பார்வையிட்டுள்ளார்.

ரஸ்யாவுக்கு தேவையான போர் ஆயுதங்களை வழங்குவதற்கும் வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளதுடன், ரஸ்யாவின் சிறப்பு படை நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

## இலங்கை அர ... தொடர்ச்சி ...

விக்கிரமசிங்கவுக்கு ஓரளவுக்கு சாதகமானதாக உள்ளது என்று கூறலாம். ஆனால் நடைபெற போகும் தேர்தலில் ராஜபக்சக்களுடன் கூட்டுச் சேர்வது என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க எடுத்தால் அது அவருக்கு பாதகமாகவே முடியும்.

அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இந்த காணொளி இலங்கை அரசியலில் அதிரடியான சில மாற்றங்களை செய்யக்கூடிய தன்மையை கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிகின்றது. அதேபோல ஜெனிவா போன்ற சர்வதேச அரங்குகளில் சர்வதேச விசாரணை அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த காணொளி அமைந்துள்ளது.

## ஞாபகமறதி ... தொடர்ச்சி ...

இந்த நோய் ஏற்படுகின்றது.

கலங்களின் இழப்பின் மூலம் வழமையாக எமது உடல் தனக்கு தேவையற்ற கலங்களை அழிப்பதுண்டு. எனினும் நாம் என்ற மூலக்கூறை தடுப்பதன் மூலம் கலங்களின் தற்கொலையை தடுக்க முடியும் அது இந்த நோய்க்கான சிகிச்சை முறையாக அமையலாம் என பிரித்தானியாவின் *Dementia Research* நிறுவனத்தை சேர்ந்த பேராசிரியர் *Bart De Strooper* தெரிவித்துள்ளார்.

## தடைவிதிக்க ... தொடர்ச்சி ...

அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்த கூடாது எனவும், சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுபவருக்கு எதிராக மீன்பிடி திணைக்களம்,கரையோர பாதுகாப்பு படையினர், பொலிஸ் அதிகாரிகள்,அதிரடி படையினர் ஆகியோரை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீனவர் அமைப்புக்கு ஆதரவளிக்கும் வகையில் ஆளுநர் கருத்து வெளியிட்டார்.

## சதிகளிலிருந்து ... தொடர்ச்சி ...

கட்டமைக்கப்படும் செய்தி பெரும் இடியாய் இறங்கியிருக்கிறது. தம் பிள்ளைகளைக் கொன்று புதைத்துவிட்டார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவேதான் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிய அகழ்வானது, இராணுவத்தால் காணாமலாக் கப்பட்டவர்களைத் தேடியலையும் உறவுகளுக்கு எதிராக வைக்கப்பட்ட பொறி எனப்படுகின்றது. இந்த அகழ்வின் பின்னால், நிற்கும் OMP இதற்கு தக்கச் சான்று. தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்குப் பின்னால், சிறீலங்கா அரசின் OMP வலிந்து நிற்கவேண்டிய வேறு தேவைகள் எவையும் இருக்கப்போவதில்லை.

இவ்வகழ்வுப் பணிகளில் சர்சதேச கண்காணிப்பாளர்கள், நிபுணர்களின் பங்களிப்பைத் தமிழர்களும், தமிழ் தேசிய அரசியல்வாதிகளும், காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினரும் கோரியிருந்தனர். ஆனால் சிறீலங்கா தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த அகழ்வாளர்களையே அரசு அனுமதித்தது. சிறீலங்கா தொல்லியல் திணைக்களம் என்பது தமிழ் பகுதிகளில் பதற்றமான சூழலையே ஏற்படுத்துகின்றது என ஐ.நா கூட கூறியபின்னரும், அதே திணைக்களம் தமிழர்கள் நீதியைக்கோரும் ஒரு விடயத்தில் தன் தலையை வலிந்து கொடுத்திருக்கின்றது. குருந்தூர்மலையில் பௌத்த பிக்குகளுடன் இணைந்து தமிழர் நிலத்தை அபரிப்பதற்கான அனைத்து வேலைகளையும் முன்னெடுக்கும் அத்திணைக்களம், குருந்தூர்மலையிலிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கின்ற கொக்குத்தொடுவாயில் தமிழர்கள் நீதிகோரும் விடயத்தில் இதயச்சுத்தியுடன் செயற்படும் என எவ்வித்தத்தில் நம்புவது?

இந்த அகழ்வுப் பணிகளில் தடய ஆய்வுக்கான சிறீலங்கா பொலிஸார் பயன்படுத்துகின்றனர். அவர்களோடு கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்த சிறப்பு அதிரடிப்படையினரும் பங்கெடுத்திருக்கின்றனர். இங்கு மீட்கப்படும் எலும்புக்கூட்டுத் தடயப்பொருட்களை வெறுங்கையுடன் அவர்கள் தொடுகின்றனர். அதனை ஆய்வுசெய்கின்றனர். அகழ்வாய்வு பற்றி எதுவுமே தெரியாத இவர்களை யார் அப்பகுதிக்குள் அனுமதித்தது? இந்தப் பொருட்களைத் தொடுவதற்கான – கையாள்வதற்கான உரிமையை எப்படி பெற்றனர்? இது கொன்றவதே சாட்சி தேடும் கதையாகிவிடாதா? இந்த விடயங்களை கொக்குத்தொடுவாயில் அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவர்களிடம் சுட்டிக்காட்டியபோது, நவீன தொல்லியல் – மானிடவியல் ஆய்வுகளில் வெறுங்கையுடன் தொல்பொருட்களைத் தொடலாம் எனக் கருத்துரைத்தனர். அதற்கான ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற சில அகழ்வாய்வுகளையும் எடுத்துக்காட்டினர்.

இந்தஅகழ்வாய்வானது, தொல்லியல்துறை சார்ந்ததோ, மானுடவியல் சார்ந்ததோ அல்ல. பல நூற்றாண்டுகளுக்கு அப்பாலான மனித எச்சங்களுமல்ல. மாறாக சிறீலங்கா அரசபடைகளால் பதினைந்து வருடங்களுக்குள் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்கள் பற்றிய அகழ்வு இது. ஈழத்தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றது இனப்படுகொலை, போர்க்குற்றம் போன்றவற்றை நிரூபிக்கும் வலுவான சாட்சியங்கள். எனவே அவற்றை நிரூபிக்கும் வகையான புதிய வடிவிலான அகழ்வுதான் இங்கு இடம்பெற வேண்டுமே தவிர, தொல்லியல் – மானுடவியல் அகழ்வு அல்ல. ஐரோப்பா போலவும், அமெரிக்கா போலவும் இங்கு ஆய்வில் ஈடுபடுவர்கள் துறைசார்ந்த இதயச்சுத்தியுடன் செயற்படுபவர்களுமல்ல. பௌத்த பிக்குகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு, அவர்களின் வேலைத்திட்டங்களைச் செய்கிறோம் என வாக்குமூலமளித்தவர்களைக் கொண்ட திணைக்களம் அது. எனவே இந்த அகழ்வின் நிதியளிப்பாளரான சிறீலங்கா அரசு சொல்வதைச் செய்யமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு.

எனவேதான் இவ்வளவு சதிகளுக்குள்ளிருந்தும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு மீளவேண்டியிருக்கிறது. அது பேசும் உண்மை வெளியுலகிற்கு எடுத்துச்சொல்லப்பட வேண்டியிருக்கின்றது.

• • •

## போரில் இலங் ... தொடர்ச்சி ...

இலங்கைக்கும் (மகிந்த ராஜபக்சாவுக்கும்) இந்தியாவுக்கும் இடையில் நல்லு றவுகளை கட்டியெழுப்புவதில் ஜா முக்கிய பங்கு வகித்தவர்.

இலங்கையில் இனஅழிப்பு போர் உக்கிரமான 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலும் கொழும்பில் தங்கியிருந்து இந்தியாவுக்கான இராஜதந்திர பணிகளை இவர் மேற்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் 2009 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இலங்கை வந்து போரை நிறுத்துவது தொடர்பில் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை ஏற்படுத்த முனைந்த போது அதனை இந்தியா இராஜதந்திர வழிகளில் தடுத்திருந்ததும் நாம் அறிந்ததே. அன்றைய காலப்பகுதியில் ஜா இலங்கையில் பணியாற்றியிருந்தார்.

## பாடசாலைகளில் ... தொடர்ச்சி ...

வருடம் 93 சம்பவங்கயே நிகழ்ந் திருந்தன.

கடந்த 10 வருடங்களில் அங்கு இடம்பெறும் துப்பாக்கி பிரயோகங்கள் அதிகரித்து வரு கின்றன. 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் அது சடுதியாக அதிகரித்து வருகின்றது.

அமெரிக்காவில் துப்பாக்கி களை மக்கள் இலகுவாக கொள் வனவு செய்து பயன்படுத்த முடியும் என்ற சட்டம் உள்ளதால் அங்கு பொது இடங்கள் மற்றும் பாடசாலைகளில் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொது அமைப்புக்கள் தொடாந்து தெரிவித்துவருகின்றபோதும், அமெரிக்க அரசு அந்த சட்டமூலத்தை மாற்றுவதை தவிர்த்து வருகின்றது. துப்பாக்கி கலாச்சாரத்திற்கு எதிராக அங்கு மக்கள் தொடாந்து குரல் எழுப்பி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

**துன்புறுத்துதல்.**

***9. ஏனைய மனிதாபிமானமில்லாச் செயல் கள்.***

***10. மரணத்தைத் தரத்தக்க கொடுஞ் சித்திரவதைகள் மற்றும் சிதைத்தல்கள் போன்ற கொடுமைகளின் ஊடாக உயிர், உடல், உள மற்றும் தேகாரோக்கியத்தின் மீது தொடுக்கப்படும் வன்முறைகள்.***

***11. கூட்டாக வழங்கப்படும் தண்டனைகள்.***

***12. பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருத்தல்.***

***13. பயங்கரவாத நடவடிக்கைகள்.***

***14. வன்புணர்தல், வலுக்கட்டாய மாக்கி விபச்சாரத்தை திணித்தல் போன்ற கீழ்த்தரமான கண்ணியக்குறைவான செயல்கள் ஊடாக தனிமனிதப் பெறுமதிகளை அழித்தல்.***

***15. கொள்ளையடித்தல் .***

***16. நாளாந்தம் கூடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீதிமன்றினாலன்றி சாதாரண மனிதருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்ட உறுதிப்பாடுகளை தவிர்த்து ஏனைய வகைகளில் சிறையிடுதல் மற்றும் மரணதண்டனைக்கு உள்ளாக்குதல்.***

***17. மேற்தரப்பட்டுள்ள எச்செயலையும் புரியப் போவதாக பயமுறுத்துதல்.***

எனவே இப்பொழுது நீங்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் எவை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள். அவை எமது தமிழ்த்தேசத்தில் நிகழ்த்தப்பட்டதா என்பதை நாங்கள் நோக்குவோமாயின் அதற்கான பதில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

போர்க்குற்றங்கள் தொடர்பான விடயங்களுடன் அடுத்தவாரம் சந்திப்போம்

**தொடரும்...**

## சிங்களத் தலை... தொடர்ச்சி ...

இதுபோன்ற சூழ்ச்சிகளிலும், வெறிபிடித்த இன அழிப்பு நடவடிக்கைகளிலும், பழம் தின்று கொட்டைபோட்ட நாடாக இலங்கை திகழ்வதை, பல பத்தா ண்டு நிகழ்வுகள் நிரூபிக்கின்றன. இக்கினியாகலை கரும்பாலையில், எரிந்து கொண்டிருந்த கரும்புச் சக்கைகளினூடே வீசியெறியப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்களின் ரணமும் நிணமும் கலந்த வாடையை, எழுபதாண்டுகளுக்குப் பிறகும் உணர முடிகிறது நம்மால்! கண்களை மூடிக் கொண்டு அந்த வாடையைச் சுவாசிக்கிற நொடியில், சிலிர்க்கிறது தேகம். எம் உறவுகளின் உடல்கள் எரிந்து கருகிச் சாம்பலான அன்றிலிருந்து, காற்றோடு காற்றாகக் கலந்தபடியே இருக்கிறது எமது தொப்புள் கொடி உறவுகளின் விடுதலைக் கனவு.

கள்ளத்தனத்திலும் கபடத்திலும் நிபுணத்துவம் பெற்ற சிங்களத் தலைமைகளிடமிருந்து தமிழர்களால் ஒரு தும்பு துரும்பைக் கூட பெற்றுக்கொள்ள இயலாது என்பதுதான் நிதர்சனம். பிச்சை கேட்கும் நிலையில் தமிழினம் ஒருபோதும் நின்றதில்லை. இனியும் நிற்கக் கூடாது. சர்வதேசத்திடமிருந்து நீதி பெறுவதிலிருந்து ஓரங்குலம் கூட பின்வாங்காமல் நிற்பது மட்டுமே உயிர்களை இழந்த லட்சக்கணக்கான உறவுகளுக்கும், மனத்தளவில் சிதைக்கப்பட்ட பல்லாயிரம் சகோதரிகளுக்கும் செய்கிற உண்மையான மரியாதையாக இருக்கும்.

சஜித்தையோ ரணிலையோ மைத்திரிபாலாவையோ நம்பிச் சோரம்போவது, சொந்த மண்ணைக் காக்க நச்சுக் குப்பிகளுடன் திரிந்த நிஜமான வீரர்களுக்குச் செய்கிற பச்சைத் துரோகம். ‘எழுதுங்களேன், நான் எழுதாது செல்லும் என் பாடலை யாராவது எழுதுங்களேன்’ என்று ஆனையிறவு களத்தில் துப்பாக்கியோடும் கவிதைப் புல்லாங்குழலோடும் நின்று நமக்கான பாதையைத் தெளிவாகக் காட்டிய வானதி போன்ற சகோதரிகளின் கனவை மெய்யாக்குவதுதான் புத்திசாலித்தனம்.

• • •

## இலங்கையின் ... தொடர்ச்சி ...

அனைத்துலக நாணய நிதியத்திற் கும் இடையிலான உடன்பாட்டின் அடிப்படையில் இந்த வாரம் அனைத்துலக நாணயநிதியம் தனது முதலாவது ஆய்வுகளை மேற் கொண்டுவருகின்ற நிலையில் பிற்ஸ் அமைப்பின் தரமிறக்கல் அறிவித்தல் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இலங்கையின் பொருளாதாரம் கடந்த ஏப்பில் - ஜூன் மாதங்களில் 3.1 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக இலங்கையின் உத்தியோகபூர்வ தகவல்கள் வெள்ளிக்கிழமை (3) தெரிவித்துள்ளன.

பல தசாப்பதங்கள் காணாத பொருளாதார வீழ்ச்சியில் இலங்கை சிக்கியதில் இருந்து மெல்ல வெளிவர முயன்றுவருகையில் இந்த வீழ்ச்சி அறிவிக்கப்பட்டுள்ளது.